
பக்கங்கள்:-24

# காலை முரசு

முழக்கம்: 02 | வள்ளுவர் ஆண்டு 2056 | தை 12 | சனிக்கிழமை | 25.01.2025 | அதிர்வு 176

## அரசியல் பழிவாங்கல் மூலம் எம்மை வீழ்த்தவே முடியாது!

### இப்படி நாமல் சூளுரை



"அரசியல் பழிவாங்கல் வேட்டை மூலம் எமது பயணத்தைத் தடுக்க முடியாது."

– இவ்வாறு 05



## இந்திய மீனவர்களின் அத்துமீறலால்

# பொறுமை இழந்த வடக்கு மீனவர்கள் நாடாளுமன்றத்துக்குப் படையெடுப்பு

### எதிர்க்கட்சி தமிழ், முஸ்லிம் எம்.பிக்களுடன் பேச்சு



இந்திய மீனவர்களின் அத்துமீறலால் தமது வாழ்வாதாரம் பாதிக்கப்படுகின்றது என்று தெரிவித்து எதிர்க்கட்சி தமிழ், முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர்களுடன் வடக்கு மீனவர் சங்கப் பிரதிநிதிகள் சந்திப்பை மேற்கொண்டனர். 05

## எனக்கு உயிர் அச்சுறுத்தல் தொடர்கின்றது

# முழுப் பாதுகாப்புப் படைகளையும் மீண்டும் தருவதற்கு உத்தரவிடுக!

### உயர்நீதிமன்றத்தில் மஹிந்த மனுத் தாக்கல்



முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, நீக்கப்பட்ட தனது பாதுகாப்புப் படைகளை மீண்டும் பணியில் அமர்த்த உத்தரவிடக் கோரி உயர் நீதிமன்றத்தில் அடிப்படை உரிமைகள் மனு ஒன்றை நேற்று தாக்கல் செய்துள்ளார்.

இந்த மனுவில் பிரதமர் ஹரிணி அமரசூரிய மற்றும் அமைச்சரவை உறுப்பினர்கள் குழு பிரதிவாதிகளாகப் பெயரிடப்பட்டுள்ளனர்.

மஹிந்த ராஜபக்ஷ தனது வழக்கறிஞர்கள் மூலம் தாக்கல் செய்த மனுவில், முறையான பாதுகாப்பு மதிப்பீடு இல்லாமல், தனது பாதுகாப்புக்காக வழங்கப்பட்ட பாதுகாப்பு 05




யாழ்ப்பாணம் கலாசார நிலையத்தின் பெயர் மாற்றத்தினால் சீறிச் சினந்து நின்ற நம் அரசியல், சமூக ஊடகப் போராளிகள், பிரமுகர்கள் பலரும் மீண்டும் யாழ்ப்பாணம் என்று சொல் சேர்க்கபட்டு மாற்றம் வந்ததும் ஜென்ம சாபல்யம் – பிறவிப் பெரும் பயன் – கிடைத்தவர்கள் மாதிரி மகிழ்ந்து அடங்கிப் போய் விட்டார்கள். நல்லதுதான்.

ஓர் அரசியல் நண்பர் மட்டும் யதார்த்தம் பேச விழைகிறார்.

'நவாலியூர் சோமசுந்தரப் புலவர்' என்று அழைப்பது சரி. ஆனால் 'யாழ்ப்பாணம் திருவள்ளுவர்' என்று தொடங்குவது சரியல்ல என்பது அவருடைய வாதம்.

ஆயினும், பெயர் மாற்றத்தின் போதான பதாகை அறிவிப்பில் முதலில் ஆங்கிலத்திலும் அடுத்து சிங்களத்திலும் மூன்றாவதாக தமிழிலும் பெயரை பொறித்தவர்கள, இப்போது பெயர் மீண்டும் மாற்றப்பட்டதை மண்டபத்தில் முகப்பில் – நெடுந்தொலைவுக்குத் தெரியக்கூடியதாக – தமிழில் மட்டும் 'யாழ்ப்பாணம் திருவள்ளுவர் 05

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம் - Bonding Tamils Globally

# யாழ். திருவள்ளுவர் பண்பாட்டு மையத்தில் உலக ஊடகப் புகைப்படக் கண்காட்சி ஆரம்பம்



(எஸ்.நிதர்ஷன்)

நெதர்லாந்து தூதரகத்துடன் இலங்கை பத்திரிகை ஸ்தாபனம் இணைந்து நடத்தும் உலக ஊடகப் புகைப்படக் கண்காட்சி நேற்று வெள்ளிக்கிழமை யாழ்ப்பாணம் திருவள்ளுவர் பண்பாட்டு மையத்தின் மண்டபத்தில் ஆரம்பமாகியது.

குறித்த கண்காட்சி நாளைமறுதினம் திங்கட்கிழமை வரை நடைபெறவுள்ளது.

புகைப்பட ஊடகவியலில் சர்வதேச விருதுகளை வென்ற புகைப்படங்கள் உட்பட புகைப்படத்தினூடாகக் கதை சொல்லும் பல புகைப்படங்கள் இந்தக் கண்காட்சியில் காட்சிப்படுத்தப் படவுள்ளன.

இலங்கைக்கான நெதர்லாந்து தூதரகத்தின் ஏற்பாட்டில் ஆரம்பமாகிய இந்த நிகழ்வில் இலங்கைக்கான நெதர்லாந்து



தூதரகத்தின் பிரதித் தூதுவர் எச்.ஈ. பொன்னீ ஹொர்பஜ், யாழ். இந்திய துணைத் தூதுவர் சாய் முரளி, முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன், நெதர்லாந்து தூதரகத்தினர் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

# மரணச் சடங்கு இறுதி ஊர்வல நிகழ்வுகளில் கலந்து கொண்டோரை மோதித் தள்ளிய கார்!

## சிறுவர்கள் உட்பட 7 பேர் படுகாயம்; சாரதி கைது!!

மரணச் சடங்கு இறுதி ஊர்வலத்தில் கலந்து கொண்டவர்கள் மீது, வேகக் கட்டுப்பாட்டை இழந்த கார் ஒன்று பின்பக்கமாக வந்து மோதியதில் 12காயமடைந்துள்ளனர்.

இவர்களில் சிறுவர்கள் உட்பட 7 பேர் படுகாயமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இந்தச் சம்பவம் நேற்று (24) பிற்பகல் 3 மணியளவில் யாழ். நல்லூர், கல்வியங்காடு , இராஜ வீதியில் இடம்பெற்றுள்ளது.

கார் சாரதி யாழ். பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ள நிலையில் விளக்க மறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பாகத் தெரியவந்துள்ளதாவது,

ஐயப்ப விரத யாத்திரைக்கு இந்தியாவுக்குச் சென்றிருந்த நிலையில், அங்கு ஏற்பட்ட திடீர் சுகயீனம் காரணமாக உயிரிழந்த பிரபல நாதஸ்வர வித்துவானும் ஐயப்ப பக்தனுமான வடிவேலு செல்வராசாவின் இறுதிக் கிரியைகள் நேற்று இடம்பெற்றன.

இவரது இறுதி ஊர்வலத்தில் கலந்து கொண்டவர்கள் மீது, வேகக் கட்டுப்பாட்டை இழந்து பயணித்த கார் பின்பக்கமாக மோதியுள்ளது.

இந்த விபத்தில் காயமடைந்த 12 பேரில் 5 பேர் சிறு காயங்கள் அடைந்த நிலையில் சிகிச்சை பெற்று வீடு திரும்பியுள்ளனர்.




ஏனைய 7 பேரும் படுகாயங்களுக்கு ஆளான நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுச் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

சத்தியசீலன் சஞ்சீவ் (வயது - 19), சம்பத் ஜனார்த்தனன் (வயது - 14), தவராசா அனஞ்ஜயன் (வயது - 19), சிறிதரன் கபினாஸ் (வயது -20), உலகநாதன் ஜெயந்தன் (வயது - 23), தவராசா ஆகாசன் (வயது -13), பிரபாகரன் வேந்துஷன் (வயது - 14) ஆகியோரே படுகாயமடைந்தவர்களாவர்.

இந்த விபத்து தொடர்பில் யாழ்ப்பாணம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.







# ஊடகர் சுகிர்தராஜனின் நினைவேந்தல் நிகழ்வு

(பழுவூரான்)

திருகோணமலையில் ஆயுததாரிகளால் சுட்டுப் படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர் எஸ்.சுகிர்தராஜனின் நினைவேந்தல் நிகழ்வு நேற்று வெள்ளிக்கிழமை மட்டக்களப்பு காந்தி பூங்கா வளாகத்தில் அமைக்கப்பட்டுள்ள இலங்கையில் படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர்களின் நினைவுத் தூபியில் இடம்பெற்றது.

மட்டக்களப்பு மாவட்டத் தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியம், மட்டு. ஊடக அமையம் மற்றும் கிழக்கிலங்கை செய்தியாளர் சங்கம் ஆகிய அமைப்புக்கள் ஒன்றிணைந்து இந்த நினைவேந்தல் நிகழ்வை ஏற்பாடு செய்திருந்தன.

மேற்படி அமைப்புக்களின் தலைவர் வா.கிருஸ்ணகுமாரின் ஒருங்கிணைப்பில் சிரேஷ்ட ஊடகவியலாளர் கே.பத்மசிறியின் தலைமையில் நடைபெற்ற இந்த நினைவேந்தல் நிகழ்வில் ஊடகவியலாளர் சுகிர்தராஜனின் திருவுருவப் படத்துக்கு சிரேஷ்ட ஊடகவியலாளரும் முன்னாள் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான பா.அரியநேத்திரன் மற்றும் சிவில் சமூக ஏற்பாட்டாளர் வணபிதா ஜெகதாஸ் அடிகளார் ஆகியோர் இணைந்து மலர்மாலை அணிவித்தனர். அத்தோடு ஊடகவியலாளர்கள் மற்றும் சிவில் சமூகப் பிரதிநிதிகளால் மலரஞ்சலியும் செலுத்தப்பட்டது.

இந்த நிகழ்வில் அண்மையில் உயிர்நீத்த சிரேஷ்ட ஊடகவியலாளர் விக்டர் ஐவனும் நினைவுகூரப்பட்டார்.

இதன்போது மாவட்டத்திலுள்ள ஊடகவியலாளர்கள், சிவில் சமூகப் பிரதிநிதிகள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.











# திலீபனின் நினைவேந்தல் குறித்து காண்டீபனிடம் ரி.ஐ.டி. விசாரணை



தியாக தீபம் திலீபனின் நினைவேந்தல் தொடர்பில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் முக்கியஸ்தரான சட்டத்தரணி நடராஜா காண்டீபனைப் பயங்கரவாதத் தடுப்புப் பிரிவினர் விசாரணைக்கு உட்படுத்தியுள்ளனர்.

இது தொடர்பில் சட்டத்தரணி காண்டீபன் தெரிவித்ததாவது:-

"ஜனவரி மாதம் 21ஆம் திகதி நான் விசாரணைகளுக்காக அழைக்கப்பட்டிருந்தேன். எனினும், அன்றைய தினம் என்னால் சமூகமளிக்க முடியாது என்பதால், ஜனவரி மாதம் 23ஆம் திகதிக்கு (நேற்றுமுன்தினம்) விசாரணையை மாற்றித் தருமாறு கோரிக்கை விடுத்திருந்தேன். அந்தக் கோரிக்கை ஏற்றுக்கொள்ளப்பட்டு நேற்றுமுன்தினம் எனக்கு எதிராகப் பயங்கரவாதத் தடுப்புப் பிரிவினர் விசாரணைகளை முன்னெடுத்திருந்தனர்.

2023ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 17ஆம் திகதி திலீபனின் திருவுருவப்படம் தாங்கிய ஊர்திப் பவனித் தொடர்பில் விசாரிக்கப்பட்டது.

சம்பவம் இடம்பெற்று 16 மாதங்களின் பின்னர் இடம்பெறும் இந்த விசாரணைக்கு எனது ஆட்சேபனையைத் தெரிவித்திருந்தேன்.

நான்கு மணித்தியாலங்கள் வரையில் இடம்பெற்ற விசாரணையில் பயங்கரவாதத் தடுப்புப் பிரிவினரின் கேள்விகளுக்கு எனது பதிலை வழங்கியிருந்ததுடன் தியாக தீபம் திலீபனின் அரசியலை முன்னெடுக்க வேண்டியது எம் ஒவ்வொருவரினதும் பணியாகும் எனும் அடிப்படையில் மிகத் தெளிவாக எனது தரப்பு நியாயத்தை முன்வைத்திருந்தேன்.

எனது அரசியல் வேணவாவை விடுதலைப் போராட்டமும் திலீபனும் காவி நின்றதாலேயே நான் அதனை ஆதரித்திருந்தேன். இன்னும் ஆதரிக்கிறேன். இனியும் ஆதரிப்பேன்." - என்றார்.

# புத்தாண்டின் முதல் மூன்று வாரங்களில் சுற்றுலா பயணிகள் வருகை அதிகரிப்பு



புத்தாண்டின் முதல் மூன்று வாரங்களில் நாட்டிற்கு வருகை தந்த சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை ஒன்றரை லட்சத்தை தாண்டியுள்ளது.

அதன்படி, சுற்றுலா மேம்பாட்டு பணியகம் வெளியிட்டுள்ள சமீபத்திய தரவு அறிக்கையில், ஜனவரி 1 முதல் 19 ஆம் திகதி வரை 153,761 சுற்றுலாப் பயணிகள் நாட்டிற்கு வந்துள்ளனர்.

அதன்படி, நாட்டிற்கு வருகை தந்த சுற்றுலாப் பயணிகளில் 27,166 இந்தியர்கள் 22,033 ரஷ்யர்கள் மற்றும் 9,763 பிரித்தானிய பிரஜைகள் அடங்குகின்றனர் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இருப்பினும், கடந்த ஆண்டு ஜனவரி மாதத்தில் சுற்றுலாப் பயணிகளின் வருகை 102,545 ஆகப் பதிவாகியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

கலாசார மண்டபம்' என்று பொறித்திருக்கிறார்கள்.

பதினாறாவது அரசமைப்பு திருத்தத்தின் சட்டச் செல்வாக்கை அவர்கள் புரிந்து கொண்டு முழு அளவில் நடைமுறைப்படுத்த முன்வந்திருப்பது மகிழ்ச்சிக்கும் வரவேற்புக்குமுரிய ஒன்று.

+ + +

தமிழ்த் தேசியக் கட்சிகளிடையே புதிய உத்தேச அரசமைப்பு குறித்து ஆராய்வதற்காக இன்று 25 ஆம் திகதி சந்திப்பு நடத்த ஏற்பாடு செய்திருந்த தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி அந்தச் சந்திப்பு இன்று நடைபெறாது என்று தெரிவித்திருக்கின்றது.

இந்த விவகாரத்தையொட்டி இவ்வாரம் நாடாளுமன்றத்தில் தமிந்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலமும் தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்றக் குழு தலைவர் சிறிதரனும் சந்தித்துப் பேசிக்கொண்டார்கள் என அறிய வருகிறது.

இந்த விடயத்தில் முடிவெடுப்பதற்காக இலங்கைத் தமிழரசு கட்சி ஏழு பேர் கொண்ட குழுவொன்றை நியமித்திருப்பது பற்றிய தகவலை இந்தச் சந்திப்பின்போது சிறிதரன் கஜேந்திரகுமார் பொன்னம்பலத்திற்கு எடுத்துரைத்தார் எனவும் கூறப்படுகிறது.

இக்குழு நியமிக்கப்பட்டிருப்பதால் அதற்குப் புறம்பாக இது சம்பந்தமான விடயத்தில் தான் பேச முடியாது என்ற நிலைவரத்தை கஜேந்திர குமாருக்கு எடுத்துரைத்திருக்கிறார் சிறிதரன்.

எனினும் முன்னர் ஏற்பாடு செய்தபடி ரெலொ தலைவர் செல்வம் அடைக்கலநாதனை நாளை மறுதினம் திங்கட்கிழமையன்று கஜேந்திரகுமார் பொன்னம்பலம் சந்தித்துப் பேசுவார் என்றும் கூறப்பட்டது.

அதே நேரம் இவ்விவகாரம் குறித்து – உத்தேச புதிய அரசமைப்பு குறித்து – இலங்கைத் தமிழரசுக் கட்சியோடு தொடர்ந்து ஊடாட்டம் வைத்து, ஈடுபாடு காட்டுவது என்பதில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி உறுதியாக இருக்கின்றது என்று அக்கட்சியின் வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்த ஈடுபாடு – ஊடாட்டம் – தற்போதையபுதிய அரசமைப்பு உருவாக்க முயற்சிகளையும் தாண்டி, தமிழ்த் தேசிய அரசியல் நலன் பற்றியதாக, ஒன்றுபட்ட செயற்பாட்டுக்கான முன்முயற்சியாக, விரிவடைய வேண்டும் என்பதுதான் தமிழர் தேசத்தின் நலன் நோக்கிய திட்டமாக இருக்க வேண்டும்.

செய்வார்களா நம் தலைவர்கள்? ஆண்டவனுக்குத்தான் வெளிச்சம். பொறுத்திருந்து பார்ப்போம்!

---

## அரசியல் பழிவாங்கல்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

தேசிய மக்கள் சக்தி அரசுக்கு எச்சரிக்கை விடுத்துள்ளார் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் தேசிய அமைப்பாளர் நாமல் ராஜபக்ஷ எம்.பி.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் கூறியதாவது:-

"கிராம மட்டத்திலிருந்து எதிர்வரும் பெப்ரவரி மாதம் முதல் எமது அரசியல் பிரச்சாரப் பணி ஆரம்பமாகும். கிராம மட்டத்திலான எமது ஆதரவாளர்களுடன் முதலில் சந்திப்பு நடத்தப்படும். அதன்பின்னர் அரசியல் குழுக்கள் மற்றும் கட்சிகளுடன் பேச்சு நடத்தப்படும்.

முறைமை மாற்றம் எனக் கூறி ஆட்சிக்கு வந்தவர்கள், பழைய பாதையிலேயே பயணிக்கத் தொடங்கியுள்ளனர். அரசியல் பழிவாங்கல் வேட்டையை ஆரம்பித்துள்ளனர். அதன்மூலம் எமது அரசியல் இயக்கத்தைக் கட்டுப்படுத்த முடியாது. அரசியல் பழிவாங்கல் வேட்டைக்கு முகங்கொடுத்து நாம் பழகிவிட்டோம். எம்மைச் சிறையில் அடைத்தாலும் கட்சியின் பணி தொடரும்.

எமது அம்மா, அப்பாவை எமக்குப் பார்த்துக்கொள்ள முடியும். நாம் அயல்வீட்டார்களிடம் உள்ளாடை வாங்கி அணிவதில்லை. ஆனால், எம்மிடம் பாதுகாப்புப் படை இல்லை. எனவே, எனது அப்பாவுக்கு முன்னாள் ஜனாதிபதிக்குரிய பாதுகாப்பை அரசுதான் வழங்க வேண்டும். அரசமைப்பின் பிரகாரம் உள்ள ஏற்பாடுகள் வழங்கப்பட வேண்டும். அதனை மீறும் வகையில் செயற்பட முடியாது." – என்றார்.

---

# கனமழை காரணமாக ஒத்திவைக்கப்பட்ட திருக்கோவில் பட்டத் திருவிழா இன்று!

(வி.ரி.சகாதேவராஜா)

கனமழை வெள்ளம் காரணமாக ஒத்திவைக்கப்பட்ட திருக்கோவில் 7 ஆவது பட்டத் திருவிழாவும் இசை நிகழ்ச்சியும் இன்று 25 ஆம் திகதி சனிக்கிழமை நடைபெறவிருக்கின்றன.

தமிழர்களின் நன்னாளான தைத் திருநாளை முன்னிட்டு இந்தத் திருவிழா நடைபெறவிருந்தது. எனினும் அந்தக் காலப் பகுதியில் நிலவிய அசாதாரண சூழ்நிலை காரணமாக இது ஒத்திவைக்கப்பட்டது.

இப் பட்டத் திருவிழா திருக்கோவில் பொது மக்களின் ஏற்பாட்டில் பிரபல சமூக செயற்பாட்டாளரும், கல்முனை ரோட்டரி கழகத்தின் முன்னாள் தலைவருமான பொறியியலாளர் சுந்தரலிங்கம் சசிகுமாரின் பூரண அனுசரணையில் நடைபெறவுள்ளது.

திருக்கோவில் ஸ்ரீ சித்திர வேலாயுத சுவாமி ஆலயக் கடற்கரை முன்றலில் இந்தக் காற்றாடித் திருவிழா 25 துயரெயசல 2025இன்று பிற்பகல் 3 மணிதொடக்கம் இரவு 10 மணிவரை நடைபெறவுள்ளது.

அவ் விழாவில் தேசிய மட்ட சாதனையாளர் ஒருவரும், விளையாட்டில் சாதனை படைத்த மாணவர் ஒருவரும் பரிசு வழங்கி கௌரவிக்கப்படவுள்ளனர் என்று பட்டத் திருவிழா அமைப்பினர் தெரிவித்தனர்.

---

## பொறுமை இழந்த...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

நாடாளுமன்றக் கட்டடத் தொகுதியிலுள்ள இலங்கைத் தமிழரசுக் கட்சி எம்.பிக்களின் ஓய்வறையில் நேற்று வெள்ளிக்கிழமை இந்தச் சந்திப்பு நடைபெற்றது.

இலங்கைத் தமிழரசுக் கட்சி, அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ், ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணி, அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் மற்றும் தமிழ் முற்போக்குக் கூட்டணி ஆகிய கட்சிகளின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் இந்தச் சந்திப்பில் பங்கேற்றனர்.

யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, மன்னார், கிளிநொச்சி மாவட்ட மீனவர்

சங்கங்களின் பிரதிநிதிகள், தேசிய மீனவர் ஒத்துழைப்பு இயக்கத்தின் மன்னார், முல்லைத்தீவு இணைப்பாளர்கள் என 14 மீனவர் பிரதிநிதிகள் சந்திப்பில் பங்கேற்றனர்.

இந்திய மீனவர்களின் அத்துமீறலாலும், சட்டவிரோத மீன்பிடி முறைகளைக் கையாள்வதாலும் தமது வருமானம் வீழ்ச்சியடைந்துள்ளது எனவும், கடற்றொழிலில் தொடர்ந்து ஈடுபட முடியாதுள்ளது எனவும், எதிர்க்கட்சியிலுள்ள எம்.பிக்களுடனேயே தம்மால் இது பற்றிப் பேச முடியும் எனவும் மீனவர் பிரதிநிதிகள் தெரிவித்தனர்.

இந்தியத் தரப்பு மற்றும் இந்த விடயத்தைப் பேசக்கூடிய தரப்புடன் பேசி தமக்கு தீர்வொன்றைப் பெற்றுத் தருமாறும் அவர்கள் கோரினர்.

இது தொடர்பில் இலங்கை அரசு, இந்தியத் தரப்புடன் பேச்சு நடத்த வசதியாக மீனவர் சங்கங்கள் குழுவொன்றை அமைப்பது எனவும், அந்தக் குழுவில் நாடாளுமன்ற உறுப்பினர்களும் இணைந்து பேச்சை முன்னெடுப்பது எனவும் மேற்படி சந்திப்பில் தீர்மானிக்கப்பட்டது.

---

## முழுப் பாதுகாப்புப்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

குழுவிலிருந்து 60 அதிகாரிகள் மட்டுமே தக்கவைக்கப்பட்டனர் என்றும், மற்ற அனைவரும் நீக்கப்பட்டனர் என்றும் தெரிவித்துள்ளார்.

தற்போது தனது பாதுகாப்புக்காக ஆயுதம் ஏந்திய பாதுகாப்புப் படையினர் யாரும் பணியில் அமர்த்தப்படவில்லை என்றும், தனது பாதுகாப்புக்காக பொலிஸ் அதிகாரிகள் மட்டுமே வழங்கப்பட்டுள்ளனர் என்றும் மஹிந்த தனது மனுவில் குறிப்பிட்டுள்ளார்.

கிட்டத்தட்ட மூன்று தசாப்தங்களாக நீடித்த போரை முடிவுக்குக் கொண்டுவர வழிவகுத்த முன்னாள் ஜனாதிபதியான தான் பயங்கரவாத அச்சுறுத்தல்களை எதிர்கொள்கின்றார் என்றும், மேலும் தனது உயிருக்கு அச்சுறுத்தல் இன்னமும் இருக்கின்றது என்றும் அவர் அந்த மனுவில் தெரிவித்துள்ளார்.

பிரதிவாதிகள் தனது பாதுகாப்பைத் தன்னிச்சையாக நீக்கியதன் மூலம் தனது அடிப்படை மனித உரிமைகளை மீறியுள்ளதாகத் தீர்ப்பளிக்குமாறும் மஹிந்த ராஜபக்ஷ உயர் நீதிமன்றத்தைக் கோரியுள்ளார்.

கூடுதலாக, தனக்கு எதிரான அச்சுறுத்தல்கள் குறித்து மதிப்பீடு செய்ய பிரதிவாதிகளுக்கு உத்தரவு பிறப்பிக்கப்பட வேண்டும் என்றும் அவர் கோரியுள்ளார்.

மனுதாரர் மஹிந்த ராஜபக்ஷ, தனக்கு வழங்கப்பட்ட முழுப் பாதுகாப்புப் படைகளையும் திருப்பித் தருமாறு பிரதிவாதிகளுக்கு உத்தரவு பிறப்பிக்குமாறும் உயர் நீதிமன்றத்தைக் கோரியுள்ளார்.

# வீடு புகுந்து வன்முறைக் குழு அடாவடி! மூன்று பேரைக் கைது செய்த பொலிஸ்!!



யாழ். கோப்பாய் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் வீடொன்றுக்குள் அத்துமீறி நுழைந்த வன்முறைக் குழு அடாவடியில் ஈடுபட்டுள்ளது.

இதையடுத்து, சந்தேகநபர்களாக மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சம்பவம் தொடர்பில் அறிந்ததும், வீட்டில் அயலவர்கள் சம்பவ இடத்துக்கு வந்ததைத் தொடர்ந்து அந்தக் குழு தப்பியோடியுள்ளது.

கடந்த புதன்கிழமை இரவு இடம்பெற்ற இந்தச் சம்பவம் தொடர்பில் கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் செய்யப்பட்ட முறைப்பாட்டுக்கு அமையவே மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர். மேலதிக விசாரணைகளைப் பொலிஸார் முன்னெடுத்துள்ளனர்.

# கோப் குழுவின் தலைவராக அரவிந்த செனரத் தெரிவு



10 ஆவது நாடாளுமன்றத்தின், கோப் எனப்படும் அரசாங்க கணக்குகள் பற்றிய குழுவின் தலைவராக நாடாளுமன்ற உறுப்பினர் அரவிந்த செனரத் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

அரசாங்கத்தினதும் அதன் அமைச்சுகள், திணைக்களங்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்றங்கள் ஆகியவற்றினதும் முகாமைத்துவ வினைத்திறனையும் நிதி ஒழுக்காற்றையும் ஆராய்வதே இந்த குழுவின் பிரதான பணியாகும்.

9 ஆவது நாடாளுமன்றத்தின் அரசாங்க கணக்குகள் பற்றிய குழுவின் தலைவராக லசந்த அழகியவண்ண செயற்பட்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

# வவுனியாவில் 128 கிலோ மாட்டிறைச்சியுடன் வாகனம் மடக்கிப் பிடிப்பு! இரண்டு பேர் கைது!!



**(வவுனியா நிருபர்)**

வவுனியா, நெளுக்குளம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட 4 ஆம் கட்டைப் பகுதியில் 128 கிலோகிராம் மாட்டிறைச்சியுடன் வாகனம் ஒன்று கைப்பற்றப்பட்டதுடன் இருவர் கைது செய்யப்பட்டனர்.

நெளுக்குளம் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி சி.எம்.பி.ஆர்.கே.திவுல்வெவவின் தலைமையிலான பொலிஸ் குழுவினர் நெளுக்குளம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் திடீர் சோதனை நடவடிக்கைகளை முன்னெடுத்திருந்தனர்.

இதன்போது குறித்த பகுதியில் பயணித்த பட்டா ரக வாகனத்தைச் சோதனைக்குட்படுத்தியபோது கொள்கலன்களில் 128 கிலோகிராம் மாட்டிறைச்சியை முறையற்ற முறையில் கொண்டு சென்றமை கண்டுபிடிக்கப்பட்டது. இதனையடுத்து குறித்த வாகனத்தைப் பொலிஸார் கையப்படுத்தியதுடன், வாகனத்தின் சாரதி உட்பட இருவரைக் கைது செய்தனர்.

கைது செய்யப்பட்டவர்களிடம் முன்னெடுக்கப்பட்ட மேலதிக விசாரணைகளின் பின்னர் கையப்படுத்தப்பட்ட 128 கிலோகிராம் மாட்டிறைச்சி, பட்டா ரக வாகனம் என்பவற்றுடன் கைது செய்யப்பட்டவர்களை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த நெளுக்குளம் பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர்.



## தரம் 05 புலமைப்பரிசில் பரீட்சை:

# பெறுபேறு மீளாய்வு விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்ளும் திகதி அறிவிப்பு

2024 தரம் 05 புலமைப்பரிசில் பரீட்சை பெறுபேறுகளை மீளாய்வு செய்வதற்கான விண்ணப்பங்கள் எதிர்வரும் 27 ஆம் திகதி முதல் ஏற்றுக்கொள்ளப்படும் என பரீட்சைகள் திணைக்களம் தெரிவிக்கின்றது.

எதிர்வரும் பெப்ரவரி 06 ஆம் திகதி வரை மீளாய்வு விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படவுள்ளன.

பரீட்சார்த்திக்கு ஏதேனும் சிக்கல் இருக்குமாயின் பரீட்சை திணைக்களத்தின் துரித தொலைபேசி இலக்கமான 1911 மற்றும் 0112784208, 0112784537 ஆகிய இலக்கங்களை தொடர்பு கொண்டு தகவல் பெற்றுக்கொள்ள முடியும் என பரீட்சை திணைக்களம் தெரிவித்துள்ளது.

கடந்த செப்டம்பர் மாதம் நடைபெற்ற தரம் 05 புலமைப்பரிசில் பரீட்சையின் பெறுபேறுகள் நேற்று முன்தினம் மாலை வெளியாகின.

2024 ஆம் ஆண்டுக்கான புலமைப் பரிசில் பரீட்சையில் 323,900 மாணவர்கள் தோற்றியதுடன் அவர்களில் 51,244 மாணவர்கள் வெட்டுப்புள்ளிகளுக்கு மேல் புள்ளிகளை பெற்று சித்தியடைந்துள்ளனர் என பரீட்சைகள் திணைக்களம் கூறியது.

# பேராசிரியர் ஆசி கந்தராஜாவின் பவளவிழா இன்று யாழ்ப்பாணத்தில்



‘ஜீவநதி’ மற்றும் ‘எங்கட புத்தகங்கள்’ ஏற்பாட்டில் பேராசிரியர் ஆசி கந்தராஜாவின் பவள விழாவும், அவர் எழுதிய அறிவியல் புனை கதைகளின் தொகுப்பான ‘சைவ முட்டை’ நூல் வெளியீடும் ‘ஜீவ நதியின் ஆசி கந்தராஜா சிறப்பிதழ்’ வெளியீடும் இன்று பிற்பகல் 3 மணி தொடக்கம் 5 30 மணி வரை யாழ்ப்பாணம் பல்கலைக்கழக நூலகக் கேட்போர் கூடத்தில் பேராசிரியர் எஸ்.சிவலிங்கராஜா தலைமையில் நடைபெற உள்ளது.

‘எங்கட புத்தகங்கள்’ நிறுவனத்தின் குலசிங்கம் வசீகரன் வரவேற்புரை நிகழ்த்த கலாநிதி ஆறு திருமுருகன் ஆசியுரை ஆற்றுவார்.

யாழ்ப்பாணப் பல்கலைக் கழக மேனாள் துணைவேந்த பேராசிரியர் என்.சண்முகலிங்கன், ஓய்வு நிலை அதிபர் சி.பவளகுமார், எழுத்தாளர் வேதநாயகம் தபேந்திரன் ஆகியோர் வாழ்த்துரைகள் வழங்க, வெளியீட்டுரையை பேராசிரியர் கந்தையா ஸ்ரீ கணேசன் நிகழ்த்துவார்.

எழுத்தாளர்கள் இ.இராஜேஷ்கண்ணன், சி.ரமேஷ், கலாநிதி குணேஸ்வரன் ஆகியோர் கருத்துரைகள் வழங்குவார்கள்.

பவள விழா நாயகர் பேராசிரியர் ஆசி கந்தராஜா கௌரவிப்பை தொடர்ந்து அவர் ஏற்புரையை நிகழ்த்துவார்.

நன்றி உரையை ஜீவநதி ஆசிரியர் பரணிதரன் ஆற்றுவார்.



# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்



259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## நீதி செய்யத் தயாரா?

திருகோணமலையில் படுகொலை செய்யப்பட்ட இளம் ஊடகவியலாளர் சுப்பிரமணியம் சுகிர்தராஜனின் 19ஆவது வருட நினைவேந்தல் நேற்று அங்கு இடம்பெற்றது.

அதனை ஒட்டி வடக்கு கிழக்கைச் சேர்ந்த ஊடகவியலாளர்களின் பத்துக்கு மேற்பட்ட அமைப்புகளும் மற்றும் பல மனித உரிமை அமைப்புக்களும் சேர்ந்து புதிய ஜனாதிபதியிடம் கையளிப்பதற்கான மகஜர் ஒன்றை கிழக்கு மாகாண ஆளுநரின் செயலாளரிடம் நேற்று ஒப்படைத்திருக்கின்றன.

மிக மோசமான இருண்ட காலம் என வர்ணிக்கப்படும் இலங்கையின் இனயுத்தம் இடம்பெற்ற காலகட்டத்தில் பெரிதும் பாதிக்கப்பட்டவர்கள் வடக்குக் கிழக்கைச் சேர்ந்த தமிழ் ஊடகவியலாளர்களும் ஊடகப் பணியாளர்களும்தான்.

வடக்கு, கிழக்கில் பாதிக்கப்பட்ட ஏனைய தமிழ் மக்களுக்கு நீதியை வழங்க மறுக்கும் பௌத்த - சிங்களப் பேரினவாதம் தமிழ் ஊடகவியலாளர்களுக்கும் நீதியை வழங்க மறுத்து அடாவடித்தனம் பண்ணுகின்றது.

நேற்று வழங்கப்பட்ட மகஜரில் கூறப்பட்ட பின்வரும் அம்சங்கள் கவனிக்கத்தக்கவை:-

வடக்கு கிழக்கில் படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர்கள் தொடர்பில் இதுவரை அதிகாரத்திற்கு வந்த எந்தவொரு அரசாங்கமும் முறையான - பக்கச்சார்பற்ற - விசாரணையை மேற்கொள்ளவில்லை. ஆட்சிக்கு வந்தவுடன் இது தொடர்பில் கண்பூச்சுக்கு ஓர் அறிவித்தலை வெளியிடுவதும் பின்னர் அது கைவிடப்படுவதும்தான் நடந்து வந்துள்ளது. தற்போதைய அரசாங்கத்தின் ஆட்சியில் அது நடைபெறாது என நம்புகிறோம்.

படுகொலை செய்யப்பட்ட மற்றும் காணாமலாக்கப்பட்ட ஊடகவியலாளர்களுக்கு நீதி கிடைப்பதும், நிவாரணங்கள் வழங்கப்படுவதும் பறிக்கப்பட்ட உயிர்களையும் அவர்களின் குடும்பங்களின் கடந்தகால சிறப்பான வாழ்வையும் தந்துவிடப்போவதில்லை என்றாலும் ஒரு நிம்மதியையேனும் அவை ஏற்படுத்தும் என்றும் நம்புகின்றோம்

+ படுகொலை செய்யப்பட்ட மற்றும் காணாமலாக்கப்பட்ட ஊடகவியலாளர்களின் நீதிக்காக தனியான விசாரணைக்குழுவை நியமித்து பாதிக்கப்பட்ட ஊடகவியலாளர்களுக்கான நீதியை வழங்க வேண்டும்.

+ வடக்குக் கிழக்குப் பிரதேசத்தில் 41 இற்கும் மேற்பட்ட ஊடகவியலாளர்கள் மற்றும் ஊடகப் பணியாளர்கள் கொல்லப்பட்டிருக்கிறார்கள். பலர் தாக்கப்பட்டிருக்கிறார்கள். ஊடக நிறுவனங்கள் மீது தாக்குதல் நடத்தப்பட்டிருக்கிறது. இவற்றுடன் தொடர்புடைய சூத்திரதாரிகள் கைது செய்யப்பட்டு சட்டத்தின் முன் நிறுத்தப்படல் வேண்டும்.

+ கடத்தப்பட்ட மற்றும் வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட ஊடகவியலாளர்களுக்கு என்ன நடந்தது என்ற உண்மையை இலங்கை அரசு வெளிப்படுத்த வேண்டும். பொறுப்புக் கூறலில் இருந்து அரசு விடுபடக் கூடாது.

+ படுகொலை செய்யப்பட்ட மற்றும் காணாமலாக்கப்பட்ட ஊடகவியலாளர்களின் குடும்பங்களுக்கு இடைக்கால நிவாரணமாக நட்டஈடு வழங்குவதற்கான நடவடிக்கைகளை அரசு உடனடியாக மேற்கொள்ள வேண்டும்.

+அனைத்து ஊடகவியலாளர்களின் தனிப்பட்ட பாதுகாப்பு மற்றும் சுதந்திரத்தை பாதுகாக்க தேவையான நடவடிக்கைகளை அரசாங்கம் முன்னெடுக்க வேண்டும்.

+ குற்றவாளிகளுக்கு தண்டனையிலிருந்து விலக்களிக்காமலிருக்கும் கலாச்சாரத்தை கொண்டுவருவதுதான் சுதந்திரமான ஊடக செயற்பாட்டை உறுதி செய்யும். அதைச் செய்ய வேண்டும்.

- இவை நியாயமான கோரிக்கைகள். ஆனால் பேரினவாத அரசுகள் இவ்விடயத்தில் நீதியாக செயற்படுவது என்பது இலகுவில் நடக்கக் கூடிய காரியமன்று.






# நாடாளுமன்றத்தில் முதன்முறையாகத் தைப்பொங்கல் விழா

தைப்பொங்கல் தினத்தைக் கொண்டாடும் வகையில் இலங்கை நாடாளுமன்ற வளாகத்தில் தைப்பொங்கல் விழா நேற்று வெள்ளிக்கிழமை வைபவ ரீதியாக சபாநாயகர் வைத்தியர் ஜகத் விக்கிரமரத்ன தலைமையில் நடைபெற்றது.

வரலாற்றில் முதன் முறையாக இலங்கை நாடாளுமன்றத்தால் கொண்டாடப்பட்ட தைப்பொங்கல் விழாவாக இது கருதப்படுகின்றது.

இந்த நிகழ்வில் இந்துக் மதத் தலைவர்கள், குழுக்களின் பிரதித் தவிசாளர் ஹேமாலி வீரசேகர, சபை முதல்வர் அமைச்சர் பிமல் ரத்நாயக்க, புத்த சாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் கலாநிதி ஹினிதும சுனில் செனெவி, கடற்றொழில், நீரியல் மற்றும் கடல் வளங்கள் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர், அமைச்சர்கள், பிரதி அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், நாடாளுமன்றச் செயலாளர் நாயகம் குஷானி ரோஹணதீர, பணியாட்தொகுதியின் பிரதானியும் பிரதி செயலாளர் நாயகமுமான சமிந்த குலரத்ன, உதவிச் செயலாளர் நாயகம் ஹன்ஸ அபேரத்ன ஆகியோர் கலந்துகொண்டனர்.

கடற்றொழில், நீரியல் மற்றும் கடல் வளங்கள் அமைச்சர்

தொடர்ச்சி▼











# நாடாளுமன்றத்தில் முதன்முறையாகத் தைப்பொங்கல் விழா

தொடர்ச்சி▲

இராமலிங்கம் சந்திரசேகரின் முன்மொழிவுக்கு அமைய சபாநாயகரின் ஆலோசனையின் கீழ், புத்த சாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சின் இந்து மத மற்றும் கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் அனுசரணையில் இந்த வைபவம் இடம்பெற்றது.

நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் பொதுமக்களுக்குத் தமிழ் கலாசாரம் பற்றிய புரிதலை ஊக்குவித்தல், தமிழ் சமூகத்தின் பாரம்பரியம் மற்றும் மரபுகளை மதித்தல், இலங்கையின் கலாசார பன்முகத்தன்மையை அங்கீகரிப்பதன் மூலம் அனைவரையும் உள்ளடக்கிய தேசிய அடையாளத்தை வளர்ப்பது உள்ளிட்ட நோக்கங்களை அடிப்படையாகக் கொண்டு இந்த நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

விவசாயிகள் தமது அறுவடைக்கு ஒத்துழைப்பு நல்கிய சூரியக்கடவுள், நிலம் மற்றும் கால்நடைகளுக்கு நன்றி கூறும் விதத்தில் தைப்பொங்கல் கொண்டாடப்படுகின்றது. இதற்கமைய தைப்பொங்கல் நிகழ்வு மதச்சடங்குகளுடன் ஆரம்பமாகியது. வண்ணமயமான கோலங்களால் அலங்கரிக்கப்பட்ட நாடாளுமன்ற வளாகத்தில் பொங்கல் நிகழ்வு இடம்பெற்றது.

தமிழர் பாரம்பரியத்தைப் பறைசாற்றும் வகையில் நடன நிகழ்வுகளும் அரங்கேற்றப்பட்டன.

இந்த நிகழ்வில் நாடாளுமன்ற திணைக்களங்களின் தலைவர்கள், பணியாளர்கள், அமைச்சுக்களின் உயர் அதிகாரிகள் உள்ளிட்ட பலரும் கலந்துகொண்டனர்.
















**கேள்வி : பிறந்திருக்கும் புத்தாண்டு உலகை என்னாக்கப் போகிறது?**

பதில் : வரப்போகும் நிகழ்வுகளைச் சில குறியீடுகள் மூலம் இயற்கை நமக்கு உணர்த்தும் என நம் மூதாதையர்கள் கருதினார்கள். நன்மை விளையப் போவதைக் காட்டும் குறியீடுகளைச் 'சகுனம்' என்றும், தீமை விளையப் போவதைக் காட்டும் குறியீடுகளை 'உற்பாதம்' என்றும் அவர்கள் உரைத்தார்கள்.

தாம் வாழ்ந்த சூழ்நிலையை உற்றுக் கவனித்த நம் மூதாதையர்களாகிய நுண்ணறிவாளர்கள் சிலர், முன் பின் சம்பவங்களிற்கு இடையிலான



தொடர்பினை உற்றுக் கவனித்தார்கள். பலதரமான அவதானிப்பின் பின்னர், அதனையே சகுனம் என்றும், உற்பாதம் என்றும் அவர்கள் உரைத்தனர்.

இன்று 'உற்பாதம்' என்ற சொல் வழக்கொழிந்து விட்டது. காலப்போக்கில் நடக்கப் போகும் நன்மை, தீமை இரண்டையும் காட்டும் முற்குறிகளை, 'நற்சகுனம்', 'தீச்சகுனம்' என்று சொல்லிப் பழகிவிட்டோம் நாம். முற்காலத்தில் நமது தமிழ் மொழியில் 'சகுன பல நிர்ணயம்' என்று ஒரு நூலே வெளிவந்திருக்கிறது.

அந் நூலில், முன் நடக்கும் இன்னென்ன சம்பவங்கள், பின்னர் நடக்கப்போகும் இன்னென்ன நன்மை, தீமைகளை எடுத்துக்காட்டும் விவரங்களைத் தெளிவாக எழுதியிருக்கிறார்கள். இந்தச் சகுனம் சம்பந்தமான கருத்தை நம்முடைய பழைய நூல்கள் எல்லாம் அங்கீகரித்திருக்கின்றன.

மிதிலையில் சீதையைக் கைப்பிடித்த பின்பு, இராமனாகியோர் அயோத்திக்குப் புறப்படுகின்றனர். அப்போது சில தீச்சகுனங்கள் தோன்றுகின்றன. அது கண்டு அஞ்சிய தசரதன், இச் சகுனங்கள் எதைக் காட்டுகின்றன என்று சோதிடர்களை அழைப்பித்துக் கேட்கிறான். அவர்கள், 'இப்பயணத்தில் ஏதோ ஒரு தடை வரப்போகிறது. ஆனாலும் அத்தடை நன்மையாகவே முடியும்' என்று உரைக்கின்றனர். அவர்கள் உரைத்த படியே, அப் பயணத்தின் இடையில், பரசுராமன் இராமனோடு மோத வந்து, பின்னர் தோல்வியுற்று, இராமனுக்கு வரங்கள் கொடுத்து மீள்வதாகக் கம்பர் பாடுகிறார்.

நம் நாட்டில் மட்டும் என்றில்லாமல், பிற நாடுகளில் கூட இத்தகைய நம்பிக்கைகள் பேணப்படுகின்றன. 'ஜுலியஸ் சீஸர்' கொலை செய்யப்படுவதற்கு முதல் நாள் இரவு அவன் மனைவி தீய கனாக் கண்டு, காலையில் 'சீஸரை' அரண்மனைக்குப் போக வேண்டாமெனத் தடுத்தாளாம் என்று சொல்வார்கள். இப்படி உலகின் பல பாகங்களிலும் சகுனங்கள் பற்றிய பதிவுகள் நிறையவே உள்ளன.

நம் வீடுகளில் இன்றும் கூட, பூனை குறுக்கா கப் போனால் அது தீச்சகுனம் என்றும், அரிசிக் காகம் கரைந்தால் விருந்தினர்கள் வருவார்கள் எனவும் நம்பி வருகின்றார்கள். நாம் கடைப்பிடிக்கும் பஞ்சாங்கங்களில் கூட, பல்லி விழும் பலன், பல்லிசொற் பலன் என்பவை பற்றிக் குறித்திருக்கிறார்கள்.

'நாம் ஏதோ கேள்வி கேட்க இவர் ஏதோ பதில் சொல்லிக் கொண்டு போகிறாரே?' என்று நீங்கள் நினைப்பது புரிகிறது. நான் இவ்வளவற்றையும் ஏன் சொன்னேன் என்றால், புதிய ஆண்டு பிறந்த கையோடு பல அபசகுனங்கள் நிகழ்ந்திருக்கின்றன. அதனால் இவ்வாண்டு, உலக மக்களுக்கு ஏதேனும் துன்பங்களைத் தந்து விடுமோ? என்று அஞ்ச வேண்டியே இருக்கிறது.

அமெரிக்கா என்ற மிகப் பெரிய வல்லரசின் ஒரு மாநிலம் முழுவதையும் காட்டுத் தீ எரித்துத் தள்ளியிருக்கிறது. இன்னும் அது முழுமையாக அணைந்தபாடில்லை. அதே நேரம் அந்நாட்டின் மற்றொரு பக்கத்தில் என்றுமில்லாதளவு பனிப் பொழிவு நிகழ்ந்து பல அழிவுகளை உண்டாக்கியிருக்கிறது.

அது மட்டுமல்லாமல் வருடத் தொடக்கத்திலேயே, என்றுமில்லாதவாறு மூன்று விமானங்கள் அடுத்தடுத்து விபத்துள்ளாகியிருக்கின்றன. பல நாடுகளிலும் மழையால் வெள்ளம் பெருகி, பல அழிவுகள் நிகழந்துள்ளன. இவையெல்லாம் நற்சகுனங்களாகத் தோன்றவில்லை.

அது தவிரவும், முன்பு நான் சொல்லியிருந்தது போல, 'வாபா வாங்கா', 'ஸ்ரீபன் ஹோக்கின்ஸ்' போன்ற தீர்க்கதரிசிகளும் 2025ஆம் ஆண்டுபற்றி நிறையவே அச்சமூட்டியிருக்கிறார்கள். சகுனக் கணிப்புக்கள் உண்மையாகப் போகின்றனவா இல்லையா என்பதைப் பொறுத்திருந்து பார்ப்போம்.

● ● ● ● ●

தொடர்ச்சி▼

தொடர்ச்சி▲

**கேள்வி : உலகில் பிழையாய் சிலர் நடக்கிறார்கள், அத்தகையவர்களை ஊக்கப்படுத்தி அதே வழியில் செலுத்துப வர்கள், பலபேராய் இருக்கிறார்கள். அவர்கள் பற்றி என்ன சொல்லப் போகிறீர்கள்?**

பதில் : கௌரவர்கள் 101 பேர் என்கிறது மகா பாரதம். இவர்களில் மூத்தவனான துரியோதனன் மட்டுமே பாண்டவர்கள் மேல் பொறாமை கொண்டு, பாஞ்சாலிக்குத் துகில் உரிந்தது, சூதாடி பாண்ட வர்களைக் காட்டுக்கனுப்பியது எனப் பல தீய காரி யங்களையும் செய்தான். மற்ற அனைவரும் துரியோதனின் பிழையை ஆதரித்து, ஊக்கப் படுத்தி நின்றனர். உடன்பிறந்தார் மட்டுமல்லா மல் பீஷ்மர், துரோணர் போன்ற பெரியோர்கள் கூட அவனைக் கண்டிக்கத் தவறினார்கள்.

முடிவில் தான் செய்த பாவத்திற்காகத் துரி யோதனன் தண்டிக்கப்பட, அவனை ஆதரித்த பாவத்திற்காக அவன் பக்கமாய் நின்ற அனைவருமே அழிந்து போனதாய் இதிகாசம் சொல்கிறது. இன்றும் அதுதான் நடக்கிறது. ஒருவர் பிழையைச் செய்ய, மற்றவர்கள் அவர் செய்வது பிழையெனத் தெரிந்தும் அதனை ஆதரித்து நிற்கின்றனர். இங்கும் பிழை செய்தவருக்கு மட்டுமல்ல, ஆதரித்த அனைவருக்கும் அவரவர் வாழ்க்கையில் ஏதோ ஒரு தண்டனை கிடைக்கத்தான் போகிறது. அதனை அவரவர் தத்தம் வாழ்வு அனுபவத்தில் விரைவில் காண் பார்கள் என்பது மட்டும் நிச்சயம். இதிகாசக் கதை பொய்க்க வாய்ப்பில்லை.

● ● ● ● ●

**கேள்வி : ட்ரம்ப்பின் பதவியேற்பு வைப வம் பார்த்தீர்களா? அவர் பற்றிய உங்கள் அபிப்பிராயம் என்ன? அவர் எடுத்திருக்கும் முடிவுகள் பற்றி நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?**

பதில் : பார்க்காமல் விடுவேனா? நவீன ஊடகங்களின் உபகரிப்பால், பதவியேற்பு வைபவம் நடந்த அந்த மண்டபத்துக்குள் இருந்தவர்களை விட நிகழ்வினை நாம் அதிகத் தெளிவாகக் காண முடிந்தது. மனிதர், தான் ஒரு சிறந்த ஆளுமை யாளர் என்பதைத் தெளிவாக நிரூபித்தார். இரண்டாம் முறை பதவியேற்பு என்பதாலோ, என்னவோ ட்ரம்ப்பிடம் சிறிய அளவிலான பதற்



றத்தைக் கூடக் காண முடியவில்லை.

ஆட்டமும், பாட்டுமாய் மனிதர் மண்டபத்திற்குள் நுழைந்த போது, ரஜனியின் 'சும்மா அதிருதில்ல' என்ற 'பஞ்ச் டயலாக்' தான் ஞாபகத்திற்கு வந்தது. உலகப் புகழ் பெற்ற இளைஞர்களான வெற்றி யாளர்களைத் துணையாகக் கொண்டு நின்ற விதம், இவர் எதனையோ சாதிக்கப் போகிறார் என்று நினைக்க வைத்தது.

வயதிற் குறைந்த மூன்றாவது மனைவியை முத்தமிட முனைந்து, அவர் போட்டிருந்த தொப்பி தடுக்க, சிறிதும் பதற்றப்படாமல், கன்னத்தில் இடவேண்டிய முத்தத்தைக் காற்றில் இட்டுச்சென்று, தனது நிதானத்தைப் பதிவாக்கிய அவரது செயல் பலரையும் கவர்ந்தது.

'இஸ்ரேல்', 'ஹமாஸ்' பணயக் கைதிகள் விடுதலை, மற்றும் போர் நிறுத்த ஒப்பந்தம் ஆகிய சில காரியங்களைக் கையெழுத்திடும் முன்னரே சாதித்துக் காட்டி, தனது ஆளுமையை நிரூபித் திருக்கிறார் ட்ரம்ப். 42 நாள்களில், 33 பணயக் கைதிகளை விடுவிக்கப் போவதாக 'ஹமாஸ்' அமைப்பு அறிவித்துள்ளது.

ட்ரம்ப் அறிவித்த பல விடயங்கள், அவரது துணிவிற்குச் சான்று பகர்கின்றன. சட்டவிரோத குடியேற்றவாசிகளை வெளியேற்றுவது, வேற்று நாட்டு யுத்தங்களிலிருந்து விலகிக் கொள்வது, அமெரிக்காவின் நன்மை நோக்கி 'பனாமா' போன்ற விடயங்களில் தலையிடப் போவது, அமெரிக்கப் போர் வீரர்களை அமெரிக்காவின் பாதுகாப்பிற்கு மட்டும் பயன்படுத்துவது போன்ற அறிவிப்புக்கள் அவர் அடித்திருக்கும் 'சிக்ஸர்கள்'.

இருபாலினம் பற்றி அவர் எடுத்திருக்கும் முடிவு, பெரும்பாலும் சாத்தியமாகாத ஒன்றாகவே இருக் கப்போகிறது என்கிறார்கள். மூன்றாம் பாலினம் பற்றிய சிந்தனை, வளர்ச்சி பெற்று உலகெங்கும் விரிந்திருக்கும் இன்றைய நிலையில் இவரது இந்தக் கட்டளை நடைமுறைச் சாத்தியமாவது சிரமமே என்கிறார்கள் ஆய்வாளர்கள்.

இந்த விடயத்தில், அமெரிக்காவும், மேற்கு நாடுகளும் தமது இளையோரைப் பலகாலமாகப் பிழையாக வழிப்படுத்தியமையோடு மட்டுமன்றி, சாத்தியமாக முடியாத, இயற்கைக்கு மாறான பல விடயங்களைச் சாத்தியமாக்கச் சட்டங்களையும் இயற்றி வைத்திருக்கின்றன. இதுநாள் வரைக்கும், இந்த விடயத்தில் தேவையற்ற சுதந்திரங்களை அளவுக்கதிகமாக வழங்கிவிட்டு, இப்போது திடீ ரென மூன்றாம் பாலினத்தையும் நிராகரித்து இவர் செய்திருக்கும் அறிவிப்பு, உலக அளவில் பல குழப்பங்களை நிகழ்த்தப் போவது மட்டும் நிச்சயம்.

போதைவஸ்துக் கடத்தல்காரர்களைத் தீவிர வாதிகளாய்க் கருதி இனி நடவடிக்கை எடுக்கப் படும் என்ற ட்ரம்ப்பின் அறிவிப்பு, அமெரிக்க மக்களைப் பெரிதும் கவர்ந்திருக்கிறது. ஆனால் இன்று, போதை வஸ்துக்காரர்கள் உலகெங்கும் பரவி, தமக்கென ஓர் இருண்ட சாம்ராஜ்யத் தையே நடாத்தி வருகின்றனர். நீதிபதிகள், அரசியற் தலைவர்கள் போன்ற பலரையும் வெளிப்படையாக அழித்து வரும் இவர்களது மூர்க்கத் தனத்திலிருந்து அமெரிக்காவை மட்டுமன்றி, ட்ரம்ப் தன்னையும் காத்துக் கொள்ள வேண்டியிருக்கும் என்பது மட்டும் நிச்சயம்.

கனடா போன்ற, தனது நேசநாடுகளையும் கூட மிரட்டியிருக்கும் இவரது செயலாலும் இவருக்கு ஆபத்துக்கள் விளைய வாய்ப்புண்டு என்கிறார்கள். அமெரிக்காவிற்குள் நிகழ்ந்திருக்கும் சகுனப் பிழைகள் 2025 ஆம் ஆண்டிற்கு மட்டுமல்ல, அமெரிக்க தேசத்துக்குமான தீமை அடையாளத் தையே காட்டுகின்றன. என்னாகப் போகின்றது என்று பார்ப்போம்.

● ● ● ● ●

**கேள்வி : 'யாழ்ப்பாண கலாசார நிலை யம்' என்ற பெயரை வள்ளுவர் கலாசார மையம் என மாற்றியிருப்பது பற்றி என்ன நினைக்கிறீர்கள்?**

பதில் : பலரும் அதனை, எதிர்த்து வருவதைத்

தொடர்ச்சி▼

தொடர்ச்சி▲

காண முடிந்தது. நடைமுறையில், யாழ்ப்பாணக் கலாசாரம் எல்லாம் கண் முன்னே அழிவதைக் கண்டு மௌனித்திருப்பவர்களும், அதனை ஊக்கப்படுத்தி வருகிறவர்களும், இந்த மண்டபப் பெயரில் மட்டும் யாழ்ப்பாணக் கலாசாரத்தை காக்க நினைப்பது வேடிக்கையாய் இருக்கிறது.

உயர்ந்த விழுமியங்களைக் கொண்ட




யாழ்ப்பாணத்தின் தனித்துவமான கலாசாரத்தின் வேர்கள் எல்லாம் அசையத் தொடங்கி பலகாலமாகிவிட்டன. அது பற்றி இங்கு யாரும் கவலைப் படுவதாய்த் தெரியவில்லை. எலியை விட்டு வாலைப் பிடித்த கதையாய், இன்று மண்டபப் பெயரில் மட்டும் கலாசாரத்தைக் காக்க நினைக்கிறார்கள்.

வள்ளுவர் சொன்ன அறங்களை மீறிய கலாசாரம் ஏதேனும், எம்மிடம் இருந்ததா என்றும் யோசிக்க வேண்டியிருக்கிறது.

எது எப்படியாயினும், இடப்பட்டிருந்த பதாகையில் தமிழை மூன்றாம் படிக்கு இறக்கியது மன்னிக்க முடியாத குற்றம் என்பதில் ஐயமில்லை.

● ● ● ● ●

**கேள்வி : நாடாளுமன்றுக்கு நாம் அனுப்பிய உறுப்பினர்கள், தமக்கிடையிலான பகைபற்றிப் நாடாளுமன்றத்தில் முறையிட்டு, தமக்கான நீதியை அவர்களிடம் கேட்டு நின்ற அசிங்கத்தைப் பார்த்தீர்களா?**

பதில் : நமக்கு நேர்ந்த அநியாயத்திற்காய் நீதி கேட்டு, இலங்கை அரசாங்கத்திற்கு எதிராய், உலக அரங்கிடம் முறையிட்டு நின்றவர்கள், இன்று தமக்கான நீதியை, இலங்கை அரசாங்கத்திடமே கோரி நிற்கும் அசிங்கத்தை என்ன சொல்ல? இவர்கள்தான் நம் இனத்துக்கான விடுதலையைப் பெற்றுத் தரப் போகிறார்களாம். வெட்கக்கேடு! உலக அரங்கம் நம்மைப் பார்த்து வாய்விட்டுச் சிரிக்கப் போகிறது. இவர்களுக்கு நட்பென்று இணையவும் தெரியவில்லை! பகையென்று விலகவும் தெரியவில்லை!

நாடாளுமன்றத்துக்குள் நாம் அனுப்பிய உறுப்பினர்கள், தமது தேவைக்காக வாதிட்டு நிற்பதையும், அதை நம் மக்கள் இரசித்து நிற்பதையும் காணச்



சகிக்கவில்லை. ஈழத் தமிழ் இனத்தின் வீழ்ச்சிக்கு, இவையெல்லாம் கட்டியம் கூறுகின்றனவோ என்று நினைக்க அச்சமாய் இருக்கிறது.

● ● ● ● ●




# கொழும்பு பங்குச்சந்தை வீழ்ச்சியை சந்தித்தது

கொழும்பு பங்குச் சந்தையின் அனைத்துப் பங்கு விலைச் சுட்டெண் நேற்று சற்று வீழ்ச்சியைப் பதிவு செய்தது.

இதன்படி, அனைத்துப் பங்கு விலைச் சுட்டெண் 108.13 புள்ளிகளால் வீழ்ச்சியடைந்தது.

அத்துடன் கொழும்பு பங்குச் சந்தையின் அனைத்துப் பங்குகளின் மொத்த விலைச் சுட்டெண் 16,917.86 புள்ளிகளாகப் பதிவாகியது.

அதன்படி, கொழும்பு பங்குச் சந்தையின் மொத்தப் புரள்வானது நேற்று 7.4 பில்லியன் ரூபாவாகப் பதிவாகியிருந்தது.





# தமிழ் மக்களுக்காகத் தலைவர்கள் ஒன்றுபட வேண்டிய நேரம் இதுவே!

**"தமிழ் மக்களுக்காகத் தலைவர்கள் ஒன்றுபட வேண்டிய நேரம் இதுவே" என்ற தலைப்பில் "தமிழ் அரசியல் ஆளுமைகளுக்கு அன்பான வேண்டுகோள்" ஒன்றை இலங்கை வாழ் தமிழர் நலன் விரும்பிகள் அமைப்பின் சார்பாக அதன் சர்வதேச இணைப்பாளர் ராஜ் சிவநாதன் வெளியிட்டுள்ளார்.**

**இலங்கை தமிழ் அரசியல் கட்சிகளுக்கான இந்த அழைப்பை இன்றும் நாளையும் இங்கு பிரசுரிக்கின்றோம்.**

இலங்கையில் தமிழ் மக்களின் நலன் கருதி, அவர்கள் எதிர்கொள்ளும் கஷ்டங்களுக்கும் அவலங்களுக்கும் இடைக்கால மற்றும் நிரந்தர தீர்வுகளை உருவாக்குவது காலத்தின் அவசியமாக உள்ளது. நீண்டகாலமாக தமிழ் மக்கள் வன்முறைகளாலும், பொருளாதார சிக்கல்களாலும், நிலப் பிரச்சினைகளாலும், அரசியல் அடக்குமுறையாலும் பிந்தங்கிப் பாதிக்கப்பட்டுள்ளனர். இந்த நிலையை மாற்ற தமிழ் அரசியல் கட்சிகள் தங்கள் இடையிலான வேறுபாடுகளை மறந்து ஒன்றுபட வேண்டும்.

## ஒன்றுபட்ட அணியின் தேவை

தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வு காண அரசியல் சீர்திருத்தங்கள், சமூகநீதியைக் காக்கும் முயற்சிகள், நில உரிமைகள், மொழி உரிமைகள் போன்ற அடிப்படை உரிமைகளில் நியாயமான மாற்றங்கள் தேவை. ஆனால் கடந்த காலங்களில் தமிழ் அரசியல் கட்சிகள், தங்கள் எண்ணம் மற்றும் கொள்கை வேறுபாடுகளால் பல வாய்ப்புகளை இழந்துவிட்டன. இதனால் தமிழ் மக்களின் நலனுக்கான கோரிக்கைகள் எமது பிரிவினையால் பலவீனமாகின.

இப்போது இந்த வேறுபாடுகளை மறந்து, ஒற்றுமையை முன்வைத்து தமிழ் மக்களின் நலனுக்காகப் போராட வேண்டிய நேரமிது.

## புதிய அரசாங்கத்துடன் நியாயமான உரையாடல்

இலங்கையில் புதிய அரசாங்கம் துவங்கியுள்ள நிலையில், இது ஒரு முக்கியமான சந்தர்ப்பமாகும். தமிழ் மக்களின் அடிப்படை பிரச்சினைகளை முன்வைக்கத் தொடர்ந்து இடைக்கால மற்றும் நிரந்தர தீர்வுகளுக்கான அடித்தளத்தை அமைக்க வேண்டிய தருணமிது.

தமிழ் மக்கள் தங்கள் தலைவர்களிடம் பாதுகாப்பை எதிர்பார்க்கின்றனர். ஆனால், அரசியல் கட்சிகள் தங்கள் சுயநலத்திற்காக அல்லது



**- ராஜ் சிவநாதன் -**
*(சர்வதேச இணைப்பாளர் -இலங்கை வாழ்தமிழர் நலன் விரும்பிகள் அமைப்பு)*

பிரிவினைக்காக செயல்படுகின்றமையால், தமிழ் மக்களின் எதிர்காலம் சந்தேகத்திற்கு உட்பட்டுள்ளது. உண்மையான ஒருமைப்பாடு இல்லாமல், ஒரு வெற்றிகரமான தீர்வு உருவாக முடியாது.

## ஒருமைப்பாடு தான் நம் வெற்றி

தமிழ் மக்கள் ஆண்டாண்டு காலமாக எதிர்கொண்ட துயரங்களை முடிவுக்கு கொண்டு வர, தமிழ் அரசியல் கட்சிகள் ஒன்றிணைந்து செயல்பட வேண்டும். புதிய அரசாங்கத்துடன் பலமிக்க உரையாடலை ஆரம்பிக்க வேண்டும்.

இது தமிழ் மக்களுக்கான விடியலின் துவக்கமாக அமையும்.

நேரம் செல்வதற்கு முன்னந் நமது ஒருமைப்பாடு மூலம் தமிழ் மக்களின் நலனை உறுதிப்படுத்தும் பொறுப்பை ஏற்றுக் கொள்ள வேண்டிய கடப்பாடு அனைவருக்கும் உள்ளது.


தமிழர் ஒருமை என்ற ஓர் கனவின் நோக்கில், நாம் அனைவரும் கைகோர்க்க வேண்டும். அதற்கு அழைப்பு விடுக்கின்றோம்.

தமிழ் மக்களின் உரிமைகளுக்கான பயணததில் மாகாண சபை முறையின் அவசியத்தையும் சமஷ்டி அரசமைப்பின் நோக்கத்தையும் புரிந்து கொள்வோம்.

இலங்கை தமிழ் மக்களின் நீண்டகால வரலாற்றில், சமஷ்டி அரசமைப்பு அவர்களின் அரசி

தொடர்ச்சி▼





# தமிழ் மக்களுக்காகத் தலைவர்கள் ஒன்றுபட வேண்டிய நேரம் இதுவே!

தொடர்ச்சி▲

யல், பொருளாதார, சமூக உரிமைகளுக்கான நிரந்தரத் தீர்வாகப் பார்க்கப்படுகிறது. தமிழர் வாழ்நிலையை மேம்படுத்துவதற்காக பல ஆண்டுகளாக அதன் தேவை வலியுறுத்தப்பட்டு வருகிறது. ஆனால், தற்போதைய சூழலில், நடைமுறையில் செயல்படக்கூடிய மாகாண சபை முறைமையை நிராகரிப்பது தவறான அணுகுமுறையாகும்,

ஏனெனில் இது தமிழ் மக்களின் தற்கால உரிமை நிலையை உறுதிசெய்யும் ஒரு முக்கியமான கைகோல் ஆகும்.

### மாகாண சபை முறைமையின் முக்கியத்துவம்

1987 ஆம் ஆண்டு இந்திய - இலங்கை ஒப்பந்தத்திற்கு அமைய அறிமுகமான 13 ஆவது அரசமைப்புத் திருத்தச் சட்டம், மாகாண சபை முறையை உருவாக்கியது. இது மத்திய அரசின் கீழ் மாகாணங்களுக்கு

சில அதிகாரங்களை வழங்குகிறது. தமிழர்களின் மொழி, கல்வி, கிராம வளர்ச்சி, பொது நிர்வாகம் போன்ற துறைகளில் செயலாற்றுவதற்கான மையமாக மாகாண சபைகள் அமைக்கப்பட்டன.

மாகாண சபை முறையின் தற்கால முக்கியத்துவம் வருமாறு:-

- தமிழ் மக்களின் அடிப்படை உரிமைகள்: இன்றைய சூழலில் மாகாண சபைகள், தமிழ் மக்களின் அடிப்படை உரிமைகளை செயல்படுத்தக்கூடிய ஒரு மிகச் சிறிய ஆனால் நடைமுறையான சாதனமாகச் செயல்படுகின்றன.
- அரசியல் அதிகாரத்தின் குவிப்பு குறைப்பு: மாகாண அளவில் உள்ள சுயாட்சிமுறைகள் மத்திய அரசின் கட்டுப்பாட்டிலிருந்து ஓரளவுக்குப் பாதுகாப்பை வழங்குகின்றன.
- அடுத்த கட்ட வளர்ச்சிக்கான அடித்தளம்: மாகாண சபைகள், சமஷ்டி அரசமைப்புக்கான தற்காலிக படியாக பார்க்கப்படலாம். இவற்றை முறையாக செயல்படுத்தினால், இடர்பாடுகளை சமாளிக்க அதுவே ஒரு முன்னோடி முறைமையாக இருக்கும்.

### மாகாண சபை முறைமை நிராகரிப்பது ஏன் தவறு?

- திறமையான உரிமையை இழக்கக் கூடும்: மாகாண சபைகள் செயல்படாது அல்லது முறைமையே முடக்கப்பட்டது என்ற எண்ணத்தில் மாகாண சபைகளை நிராகரிப்பது, தமிழ் மக்களின் உரிமைகளைக் கைவிடுவதற்குச் சமமானது.
- மத்திய அரசுக்கு ஆதிக்கம்: மாகாண சபைகளை நிராகரித்தால், மத்திய அரசு தமிழ் மக்களின் வாழ்வை நெருக்கடி அடிப்படையில் முழுமையாக கட்டுப்படுத்தும் ஆற்றல் பெற்றுவிடும்.
- சமஷ்டி அரசமைப்புக்கான போராட்டத்தில் தடை: மாகாண சபை போன்ற இடைக்கால அமைப்புகள் தமிழ் மக்களின் உரிமைகளைப் பேணுவதற்கான கருவியாக செயல்படலாம். அதை மறுத்துவிடுவது, சமஷ்டி அரசமைப்புக்கான போராட்டத்தையும் தள்ளிப் போடும்.

### மாகாண சபையே சமஷ்டி தீர்விற்கான பாதை

நிறுவப்பட்ட மாகாண சபைகளை முழுமையாக செயல்பட வலியுறுத்துவதும், அதில் உள்ள குறைகளைத் திருத்துவதும், மெல்ல மெல்ல சமஷ்டி அமைப்பை நோக்கி நகர்வதற்கான வழியைக் காட்டும்.

- முழுமையான அதிகாரப்பகிர்வு: மாகாண சபைகளின் அதிகாரங்கள் தற்போது சுருக்கப்பட்டாலும், அதை விரிவுபடுத்தி நடுநிலை ஆட்சி நோக்கி நகர வேண்டும்.
- மாவட்டங்களின் முன்னேற்றம்: மாகாண சபைகள் கல்வி, நிலம், தொழில்துறை வளர்ச்சி போன்ற துறைகளில் தமிழர் வாழ்வாதாரத்தை மேம்படுத்த அனுமதிக்கின்றன.
- அரசியல் மூன்றடி நிலை: மாகாண சபைகள் நாடு முழுவதும் அரசியல் சீரதருத்தத்தின் அடிப்படையை உருவாக்கும்.

### சமஷ்டி அரசமைப்பை நோக்கி பயணிக்க ஒரு கட்டாயப் படி

நிரந்தர தீர்வாக இருக்கும் சமஷ்டி அரசமைப்பை இலங்கை அரசாங்கம் ஏற்றுக்கொள்ளாது வரும் நிலையில், மாகாண சபைகளை முழுமையாக செயல்படுத்த வலியுறுத்துவது இன்றியமையாததாகும்.

- தமிழர் ஒருமைப்பாட்டின் அர்த்தம்: மாகாண சபை முறையை நிராகரிப்பது தமிழ் மக்களின் உரிமைகளை பிரிந்து செல்வதாகவும் கருதப்படும். மாறாக, அதை மேம்படுத்தி சமஷ்டி அரசமைப்பை நோக்கிப் பயணிக்க வேண்டும்.
- நடைமுறையில் மாற்றங்கள்: தமிழர் வாழ்வாதாரத்தை மறுபடியும் கட்டமைக்க, மாகாண சபைகளை ஒரு நம்பகமான சாதன

தொடர்ச்சி▼

# தமிழ் மக்களுக்காகத் தலைவர்கள் ஒன்றுபட வேண்டிய நேரம் இதுவே!

தொடர்ச்சி▲

மாக பயன்படுத்தலாம்.

இன்றைய சவால்கள் மிகப் பெரியதாக இருந் தாலும், நடைமுறையில் செயல்படும் மாகாண சபைகளை நிராகரிக்காமல், அதை சரியாக பயன்படுத்தி, தமிழ் மக்களின் பிரச்சினைகளை உடனடி முறையில் தீர்க்கவும், சமஷ்டி அரசமைப் புக்கான நீண்டகால போராட்டத்தை தொடரவும் தமிழ் அரசியல் கட்சிகள் ஒன்றிணைய வேண்டும்.

மக்கள் நலனே முன்னுரிமை என்ற தார்மீக நோக்கில், மாகாண சபைகளை புறக்கணிக்காமல் அதைச் செயல் வடிவில் கொண்டு வரும் போராட்டம் தொடர வேண்டும். ஒருமைப்பாடு, சிந்தனை மற்றும் செயல்திறன் மூலமே நம் எதிர்காலம் பாதுகாக் கப்படும்.

### சுயநல அரசியலின் மோசமான விளைவுகள்

மக்கள் நலனின் புறக்கணிப்பு: இலங்கையின் அரசமைப்பில், மக்கள் நலனின் முன்னேற்றம் பல தடைகளுக்கு உள்ளாகி வருகிறது. தமிழ் மக்களின் உரிமைகள், பொருளாதார மேம்பாடு, சமூகநீதி போன்ற முக்கிய பிரச்சினைகள் தீர்க்கப்படாமல் இருக்கக் காரணமான முக்கியமான ஒன்று சுயநல

அரசியல் ஆகும். பல அரசியல் தலைவர்கள் மற்றும் பங்குதாரர்கள் தங்கள் சொந்த நலன்களுக் கும், தங்கள் சுய உணர்வுகளுக்கும் முதன்மை அளித்து, மக்கள் நலனுக்கான விட்டுக்கொடுப்பு களை செய்யத் தயங்குவது குறிப்பிடத்தக்க ஒரு தவறு.

சுயநல அரசியலின் தாக்கம்: அரசியல் தலை வர்கள் தங்கள் சொந்த ஆதிக்கத்தையும், தனிப்பட்ட சக்தியையும்

பாதுகாப்பதற்காக மக்கள் நலனைக் காணாமல் போகச் செய்கிறார்கள்.

### சுயநலத்தின் விளைவு

- மக்கள் வலிமையான எதிர்ப்புகளை முன்வைத் தாலும், அரசியல் தலைவர்கள் தங்கள் சொந்த ஆதிக்கத்தை இழந்து விடக்கூடாது என்பதற் காக பொருத்தமான தீர்வுகளை மேற்கொள்ளத் தயங்குகிறார்கள்.
- பொதுவாக உணர்ந்த தீர்வுகளுக்காக ஒத் துழைக்காமல், தங்களின் தனிப்பட்ட இலட்சி யங்களை முன்னெடுத்து, ஒருமித்த பயணத் தைத் தடை செய்கிறார்கள்.

### கட்சிப்பிரிவினைகளால் இழப்புகள்

- தமிழர் அரசியல் கட்சிகளுக்கிடையேயும், தேசிய அரசியல் அமைப்புக்களுக்கிடையேயும், கட்சிக் குள்ளும் உள்ள சுயநல அரசியலால், மக்கள் எதிர்கொள்கிற முக்கிய பிரச்சினைகள் மறக் கப்படுகின்றன. மறைக்கப்படுகின்றன.
- ஒருமைப்பாட்டில் செயல்பட முடியாததால், மக்கள் மத்தியில் ஏமாற்றம் உருவாகிறது.

### நிராதரவாக நிற்கும் மக்கள்

தமிழ் மக்கள் அநீதி, வறுமை, வேலைவாய்ப்புப் பற்றாக்குறை, கல்வி வளங்கள் இல்லாமை போன்ற பல சவால்களை எதிர்கொள்கின்றனர். ஆனால், அரசியல் தலைவர்கள் தங்கள் தனிப்பட்ட சுய நலத்திற்காக பொது மக்களின் பிரச்சினைகளைக் கவனிக்க மறுப்பது மிகப் பெரிய துரோகம்.

### அரசியல் சுயநலத்தின் காரணங்கள்

1. கோரிக்கைகளின் அடிப்படையில் சரியான அழுத்தம் உருவாக்க இயலாமல், மத்திய அரசின் நிலையை தமிழர் இனவளர்ச்சிக்கு எதிராக வலுப்படுத்துகிறார்கள்.
2. எவரும் பொறுப்பேற்காமல், ஒருவரை ஒருவர் குற்றம்சாட்டுவதில் அரசியல் தலைவர்கள் நேரத்தை வீணாக்குகின்றனர்.
3. மக்கள் நலனுக்கான விட்டுக்கொடுப்புகள் இல்லை:
4. சமஷ்டி அரசமைப்பை நோக்கி நகர்வதற்கான நடவடிக்கைகள் நிற்கின்றன.
5. மாகாண சபைகளின் செயல்திறனை மேம்படுத்த முறையான ஒத்துழைப்பு கிடைக்கவில்லை.
3. சுயநலம் மக்களின் நம்பிக்கையை இழக்கச் செய்கிறது.

தமிழ் மக்களின் அரசியல் தலைமைமை தானம் குறைந்ததற்கு சுயநல அரசியலே முக்கிய காரணம். பொதுமக்கள் தங்கள் எதிர்காலத்தை இந்த தலைவர்களிடம் ஒப்படைத்தாலும், அவர்கள் அந்த நம்பிக்கையைப் பேணாமல் சுயநலத்திற்கு அடிமையாகின்றனர்.

- நம்பிக்கையின்மை:
- ஒவ்வொரு தேர்தலின் பின்னரும் மக்கள் ஏமாற்றப்பட்டு வருகின்றனர்.
- தமிழ் மக்களின் உணர்வுகளை பிரதிநிதித்துவம் செய்ய அரசியல் தலைவர்கள் தவறிவிடுகி-ன்றனர்.

### மாற்றங்களுக்கான தடைகள்

- முன்னேற்றத்திற்கான விடயங்கள் தலைவர்கள் இடையே உடனடி விவாதத்திற்குள் முடங்கு கின்றன.
- பொதுவான நோக்கங்களை நிர்மாணிக்காமல், பிரிவினை வளர்க்கிறார்கள்.

### விட்டுக்கொடுக்காமையால் தமிழ் மக்களுக்கு ஏற்பட்ட பாதிப்பு

அரசியல் சுயநலம் காரணமாக, தமிழ் மக்கள் நனுக்கான விடயங்களில் விட்டுக்கொடுப்புகள் செய்ய மறுக்கும் அணுகுமுறையின் காரணமாக ஏற்பட்டுள்ள இழப்புகள் வருமாறு:-

- மறுக்கப்படும் வாய்ப்புகள்
- மாகாண சபை அதிகாரங்களை விரிவுபடுத்த அரசியல் தலைவர்கள் ஒன்றிணையாதமை.
- பொருளாதார நிதி உதவிகளைத் இருப்பிக் கொள் வதற்கான கூட்டணி பங்காளிகள் இல்லாத நிலை.
- அரசியல் சங்கிலி முறைகள்
- தமிழ் மக்களின் தலைமைமைத் தானத்துக்கு எதிராக, மத்திய அரசுடன் சேர்ந்து சில தலை வர்கள் நேரடி நடவடிக்கைகளை மேற்கொள்வது.
- ஒரு பாரம்பரிய அரசியல் தலைமைமைத் தா-னத்தை உருவாக்குவதற்கு சுயநலம் தடையாக அமைகிறது.

(மிகுதி நாளை)

# நல்லூர் இளங்கலைஞர் மன்றத்தில் இன்று புதிய கட்டடத் திறப்பு விழாவும் இசை விழாவும்

## தொடர்ந்து மூன்று நாள்களுக்கு பல்வேறு நிகழ்வுகள்



இன்று திறந்து வைக்கப்படவுள்ள இளங்கலைஞர் மன்ற மண்டபத்தின் முகப்புத் தோற்றம்.

நல்லூர் இளங்கலைஞர் மன்றம், புலம்பெயர் உறவுகள் மற்றும் கலைஞர்களின் ஆதரவுடன் அதன் புதிய கட்டடத்தைப் புனரமைத்துள்ளது. அந்தப் புதிய கட்டடத் திறப்பு விழாவும் இசை விழாவும் இன்று தொடக்கம் நாளை மறுதினம் வரை மூன்று நாள்கள் தொடர்ந்து நடைபெற ஏற்பாடாகி இருக்கின்றது.

முதலாம் நாள் இன்று காலை நிகழ்வுகள் 9 மணிக்கு நல்லூரில் இளங்கலைஞர் மன்றத்தின் கலா மண்டபத்தில் மன்றத்தின் தலைவரும் வடக்கு மாகாண சபை அவைத் தலைவருமான சி.வி.கே.சிவஞானம் தலைமையில் நடைபெற உள்ளது.

பிரதம விருந்தினராக வடக்கு மாகாண ஆளுநர் நாகலிங்கம் வேதநாயகன் பங்குபற்றுவார். சிறப்பு விருந்தினராக இந்தியத் துணை தூதுவர் சாயிமுரளி கலந்து கொள்வார்.

சிவபூமி அறக்கட்டளை, தெல்லிப்பளை துர்க்கா தேவி தேவஸ்தானம் ஆகியவற்றின் தலைவரும், இளங்கலைஞர் மன்றக் காப்பாளருமான கலாநிதி ஆறு திருமுருகன், ஈழத்தின் சிரேஷ்ட இசையமைப்பாளர் இசைவாணர் மு.கண்ணன் ஆகியோர் கௌரவ விருந்தினர்களாகப் பங்கு பற்றுவர்.

செல்வராஜா – சௌந்தரதேவி தம்பதியர் (அபிராமி கேட்டரிங் – கனடா), கனடா தொழிலதிபர் தங்கராசா ரூபன், கட்டடக் கலைஞர் ச.துவாரகன் ஆகியோர் விசேட விருந்தினர்களாகப் பங்கு பற்றுவர்.

முதலாம் நாள் காலை நிகழ்ச்சிகளை கவிராஜராஜன் கவிஞர் கு.வீரா தொகுத்து வழங்குவார். ஈழத்தின் புகழ் பூத்த தவில், நாதஸ்வர வித்துவான்களின் மங்கல இசையுடன் நிகழ்வு ஆரம்பமாகும்.

நல்லைக் குருமகா சந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள் ஆசியுரை வழங்குவார். தொடர்ந்து மண்டபம் திறந்து வைத்தல், தமிழ்த்தாய் வாழ்த்து, மன்ற கீதம் இசைத்தல், வரவேற்புரை ஆகியன இடம்பெறும்

சுழிபுரம், பொன்னாலை சந்திர பரத கலாலயம் வழங்கும் வரவேற்பு நடனம் இடம்பெறும்.

தலைமை உரையை சி.வி.கே.சிவஞானம் நிகழ்த்த, நிறுவுநர் சிறப்புரையை இன்னிசை வேந்தர் பொன். சுந்தரலிங்கம் ஆற்றுவார்.

மன்ற ஆரம்ப காலத்தில் நிதி சேகரித்து உதவியவர்கள் கௌரவிக்கப் படுவார்கள். தொடர்ந்து காலை நிகழ்வில் மலர் வெளியீடு இடம்.

இன்று மாலை 4 மணிக்கு நடைபெறும் முதலாம் நாள் மாலை நிகழ்வுகளில் யாழ் மாவட்ட அரச அதிபர் ம.பிரதீபன், வைத்திய நிபுணர் எஸ் சிவசுதன், சிரேஷ்ட விரிவுரையாளர் செல்வி க.பரமேஸ்வரி ஆகியோர் சிறப்பு அதிதிகளாகப் பங்கு பற்றுவர். கவிஞர் கு.வீரா நிகழ்ச்சிகளைத் தொகுத்து வழங்குவார்.

மங்கல இசையை நல்லூர் கந்த சாமி கோவில் ஆஸ்தான வித்துவான் ஈழநல்லூர் பி.எஸ்.பி.ரஜீந்திரன் குழுவினர் வழங்குவர். இயக்கநர் திருமதி வாசஸ்பதி ரஜீந்திரன் வழிகாட்டலில் நல்லூர் சாரங்கம் இசை மன்றத்தின் குழு இசை இடம் பெறும்.

தொடர்ந்து இடம்பெறும் இசைக்கச்சேரியில் செல்வி லிலானி தங்கவடிவேலின் பாட்டு இடம்பெறும். அணிசெய் கலைஞர்களாக வயலின் இ.நிரோஜன், மிருதங்கம் க.இசை நிலவன், கடம் சி.கீரன், கெஞ்சிரா அபிராம் பங்கு பற்றுவார்கள்.

தொடர்ந்து கலைஞர் கௌரவிப்பு இடம்பெறும்.

அதன்பின்னர் இடம்பெறும் இசை அரங்கில் தமிழ்நாடு, இந்தியாவின் இசைப்பேரொளி எஸ்.மகதியின் பாட்டிசைக் கச்சேரி இடம் பெறும். நெல்லை ந.ரவீந்திரன் வயலின் இசைக்க, எஸ். திவ்யரூபசர்மா மிருதங்கமும், அனிருத் அத்றியா கெஞ்சிராவும் வாசிப்பர்.

இன்றைய மாலை நிகழ்வின் கடைசி இசை நிகழ்வாக தேனிசையாளன் ஸ்ரீகுகனின் ஸப்தஸ்வரா கலைஞர்கள் வழங்கும் திரையிசை இலக்கியப் பாடல்கள் இடம் பெறும்.

நாளைய இரண்டாம் நாள் நிகழ்வுகள் காலையும் மாலையும் இடம் பெறும். மூன்றாம் நாள் நிகழ்வு நாளை மறுதினம் மாலை இடம் பெறும்.

# கடந்த கால அரசாங்கங்களின் முறையற்ற திட்டமிடலே பொலன்னறுவை வெள்ளப் பெருக்கை சந்திக்க காரணம்

## முன்னாள் ஜனாதிபதி மைத்திரி தெரிவிப்பு



பொலன்னறுவை மாவட்டத்தில் பெய்து வரும் கனமழை காரணமாக விவசாய நிலங்கள் மற்றும் சொத்துக்கள் சேதமடைந்துள்ளமை தொடர்பில் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன விசேட அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளார்.

அடுத்தடுத்து வந்த அரசாங்கங்கள் முறையான ஒரு திட்டத்தை செயல்படுத்த தவறியதே இதற்குக் காரணம் என கூறியுள்ளார்.

அந்த அறிக்கையில் அவர் மேலும் குறிப்பிடுகையில்,

“மொரகஹகந்த மற்றும் களுகங்கை நீர்த்தேக்கங்களிலிருந்து சேகரிக்கப்படும் நீர் பொலன்னறுவை மாவட்டத்தில் உள்ள மினிபே நீர்த்தேக்கத்திற்கு மட்டுமே செல்வதால், 2019 ஆம் ஆண்டில், மொரகஹகந்த நீர்த்தேக்கத்திலிருந்து அனுராதபுரம் மற்றும் வடமேல் மாகாணத்தின் பகுதிகளுக்கு நீரைக் கொண்டு செல்வதற்காக 15-20 கிலோமீற்றர் கால்வாயை அமைத்து, கட்டுமானப் பணிகளை மேற்கொண்டனர். 2019 முதல் 2024 வரை வடமேல் மற்றும் அனுராதபுரத்திற்கான கால்வாய்களின் பணிகள் அப்போது நடைபெற்று வந்தன. ஆனால் அதனை தொடர்ச்சியாக அரசாங்கங்கள் செயல்படுத்தவில்லை.

2019 முதல் 2024 வரை வடமேல் பகுதிக்கும் மற்றும் அனுராதபுரத்திற்கும் செல்லும் முக்கிய கால்வாய்கள் வெட்டப்பட்டிருந்தால், பொலன்னறுவை இவ்வளவு பேரழிவை சந்தித்திருக்காது .

தற்போதைய அரசாங்கம் இந்த விடயத்தில் கவனம் செலுத்தி, அனுராதபுரம் மற்றும் வடமேல் மாகாணத்திற்கு நீரை கொண்டு செல்லும் கால்வாய்களை நிர்மாணிக்கத் தொடங்கினால், பொலன்னறுவையை இத்தகைய அழிவில் இருந்து மீட்கலாம் .

அனுராதபுரம் மற்றும் வடமேல் மாகாணத்திற்குச் செல்லும் கால்வாய்கள் உடனடியாக அபிவிருத்தி செய்யப்பட வேண்டும்.““ என்று குறிப்பிட்டுள்ளார்.





# மன்னார் காற்றாலைத் திட்டம் இரத்துச் செய்யப்படவில்லை

## அதானி குழுமம் அறிவிப்பு

மன்னார் காற்றாலை திட்டம் இரத்து செய்யப்படவில்லை என அதானி குழுமம் அறிவித்துள்ளது.

மன்னார் மற்றும் பூநகரி பகுதியில் அதானி நிறுவனம் செயற்படுத்த முன்மொழியப்பட்ட 484 மெகாவோட் காற்றாலை மின் திட்டங்கள் இரத்து செய்யப்பட்டுள்ளதாக வெளியான செய்திகள் அனைத்தையும் அதானி குழுமம் திட்டவட்டமாக மறுத்துள்ளது.

மேலும் இந்தத் தகவல்கள் பொய்யானவை என அதானி குழுமத்தின் ஊடகப்பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

இலங்கை அமைச்சரவையின் அங்கீகரிக்கப்பட்ட கட்டணங்களை மறு மதிப்பீடு செய்யும் தீர்மானம், புதிய அரசாங்கத்தால் மேற்கொள்ளப்பட்ட ஒரு நிலையான மறுஆய்வு செயல்முறை என்றும், நாட்டின் புதுப்பிக்கப்பட்ட எரிசக்தி கொள்கைகள் மற்றும் முன்னுரிமைகளுடன் இணக்கத்தை உறுதி செய்வதே இந்த மதிப்பாய்வின் நோக்கமாகும் எனவும் அதானி குழுமம் தெரிவித்துள்ளது.

புதுப்பிக்கத்தக்க எரிசக்தி மற்றும் பொருளாதார வளர்ச்சியை ஊக்குவிக்கும் வகையில், இலங்கையின் பசுமை எரிசக்தி துறையில் 1 பில்லியன் டொலரை முதலீடு செய்ய அதானி குழுமம் உறுதிபூண்டுள்ளதாகவும் அந்த குழுமத்தின் ஊடகப்பேச்சாளர் குறிப்பிட்டுள்ளார்.



# அருவக்காடு குப்பை மீள்சுழற்சி செயற்றிட்டத்தை நான்கு மாதங்களில் நடைமுறைப்படுத்தத் திட்டம்

அருவக்காடு குப்பை மீள்சுழற்சி செயற்றிட்டத்தை அடுத்த 4 மாதங்களில் நடைமுறைப்படுத்த திட்டமிட்டுள்ளதாக நகர அபிவிருத்தி, வீடமைப்பு, நிர்மாண அமைச்சு தெரிவிக்கின்றது.

பல்வேறு காரணிகளால் குறித்த செயற்றிட்டத்தை நடைமுறைப்படுத்த முடியாத நிலை ஏற்பட்டதாக அமைச்சர் அனுர கருணாதிலக்க தெரிவித்தார்.

அருவக்காடு பகுதியில் கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையத்தின் குறைபாடுகளை நீக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது.

கொழும்பு, புறநகர் பகுதிகளிலுள்ள உள்ளூராட்சி மன்றங்களிலுள்ள குப்பைகளை ரயில் மூலம் அருவக்காட்டுக்கு கொண்டு செல்ல திட்டமிடப்பட்டுள்ளதாக அமைச்சர் அனுர கருணாதிலக்க குறிப்பிட்டார்.

நாளாந்தம் 6200 மெட்ரிக் தொன் கழிவுகளை அருவக்காட்டுக்கு கொண்டு செல்ல திட்டமிடப்பட்டுள்ளது.

2016ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட இந்த திட்டம் பல்வேறு தொழில்நுட்ப மற்றும் திட்டமிடல் சிக்கல்களால் இதுவரை முழுமைப்படுத்தப்படவில்லை.




# மாகாண சபைத் தேர்தலை விரைவில் நடாத்துவதற்கு சட்டத்திருத்தங்கள்

மாகாண சபை தேர்தலை விரைவில் நடாத்துவதற்கான சட்டத்திருத்தங்கள் முன்னெடுக்கப்படுகின்றன என பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் அமைச்சு தெரிவிக்கின்றது.

2016 ஆம் ஆண்டு 17ஆம் இலக்க மாகாண சபை சட்டத்தின் கலப்பு தேர்தல் முறையின் கீழ் மாகாண சபை தேர்தலை நடாத்துவதற்கு நாடாளுமன்ற அனுமதி கிடைத்துள்ளதாக அமைச்சர் பேராசிரியர் சந்தன அபேரத்ன தெரிவித்துள்ளார்.

அதனை நடைமுறைப்படுத்துவற்கு எல்லை நிர்ணயம் தொடர்பிலான ஆணைக்குழுவின் அறிக்கையை சமர்ப்பிக்க வேண்டும் என்ற போதிலும் அந்த அறிக்கை நாடாளுமன்றத்தில் தோற்கடிக்கப்பட்டது.

தற்போதைய சூழ்நிலையில் மாகாண சபைத் தேர்தலை கடந்த கால முறைமையிலேயே மீண்டும் நடாத்துவது தொடர்பில் கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டுள்ளன என அமைச்சர் சந்தன அபேரத்ன தெரிவித்துள்ளார்.

1988ஆம் ஆண்டு மாகாண சபைத் தேர்தல்கள் சட்டத்தின் விதிமுறைகளுக்கு அமையவே பழைய முறைப்படி மாகாண சபைத் தேர்தலை நடாத்த வேண்டும்.

இதற்கமைய விரைவில் அமைச்சரவையில் மகஜர் சமர்ப்பிக்கப்படும் என பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் அமைச்சர் தெரிவித்தார்.

இதனை தொடர்ந்து மாகாண சபைத் தேர்தலை ஆகஸ்ட் மாதம் நடாத்துவதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என அமைச்சர் பேராசிரியர் சந்தன அபேரத்ன மேலும் தெரிவித்துள்ளார்.



# மகாராஷ்டிர ஆயுத தொழிற்சாலையில் சக்திவாய்ந்த வெடிவிபத்து; 8 பேர் பலி

மகாராஷ்டிராவில் உள்ள ஆயுத தொழிற்சாலையில் நேற்று வெள்ளிக் கிழமை சக்திவாய்ந்த வெடிவிபத்து ஏற்பட்டுள்ளது.

மகாராஷ்டிர மாநிலம் பண்டாரா மாவட்டத்தில் உள்ள ஆயுதத் தொழிற் சாலையில் ஏற்பட்ட இந்த பாரிய வெடிப்பு சம்பவத்தில் 8 பேர் உயிரிழந்துள்ளனர். மேலும் 7 பேர் காயமடைந்துள்ளனர் என தெரிவிக்கப்படுகிறது.

பண்டாரா மாவட்டத்தில் உள்ள தொழிற்சாலையில் நேற்று காலை 10.30 மணியளவில் வெடிப்பு சம்பவம் நிகழ்ந்ததாக மாவட்ட ஆட்சியர் சஞ்சய் கோல்டே தெரிவித்துள்ளார்.

மீட்புப் படையினரும் மருத்துவப் பணியாளர்களும் உயிர் பிழைத்த வர்களைத் தேடிக் கொண்டிருந்த நிலை யில், தீயணைப்புப் படையினர் நிலைமையைக் கட்டுப்படுத்தும் பணி யினை முன்னெடுத்திருந்தனர்.

வெடிப்பு சம்பவத்தில் 8 பேர் உயிரி ழந்துள்ளனர் எனவும் 7 பேர் காயமடைந் துள்ளனர் என்றும் முதற்கட்ட தகவல்கள் தெரிவிக்கின்றன என்பதை மத்திய அமைச்சர் நிதின் கட்கரி உறுதி செய் தார்.

அதேநேரம், வெடிவிபத்தில் தொழிற் சாலையில் கூரை இடிந்து விழுந்த தாகவும், அதன் கீழ் குறைந்தது 12 பேர் இருந்தனர் என்றும் மாவட்ட ஆட்சியர் சஞ்சய் கோல்டே கூறியுள்ளார்.

வெடி விபத்துக்கான காரணம் இதுவரை கண்டறியப்படாத நிலையில், அதிகாரிகள் விசாரணையை ஆரம்பித் துள்ளனர்.



# சஞ்சய் ராய்க்கு மரண தண்டனை கோரி கொல்கத்தா உயர் நீதிமன்றத்தில் மேல்முறையீடு



ஆர்.ஜி.கர் மருத்துவக்கல்லூரி மருத்துவமனை துஷ்பிரயோக வழக்கு குற்றவாளி சஞ்சய் ராய்க்கு மரண தண்டனை விதிக்கக் கோரி, கொல்கத்தா உயர் நீதிமன்றத்தில் சி.பி.ஐ. நேற்று மேல் முறையீட்டு மனு தாக்கல் செய் துள்ளது.

இந்த பாலியல் வன்கொடுமை வழக்கில் சஞ்சய் ராய்க்கு விசாரணை நீதிமன்றம் வழங்கிய தண்டனை போது மானதாக இல்லை என்று கூறி மத்திய புலனாய்வு அமைப்பு (சி.பி.ஐ), உயர் நீதிமன்ற நீதிபதிகள், டெபாங்ஷு பசாக் மற்றும் எம்டி ஷப்பர் ரஷிதி அடங்கிய அமர்வு முன்பு நேற்று மேல் முறையீட்டு மனுவினைத் தாக்கல் செய்தது.

இதற்கு பதில் அளித்த நீதிமன்ற அமர்வு, இதே கோரிக்கையுடன் மாநில அரசும் மனு ஒன்றினைத் தக்கல் செய் துள்ளது, அதனுடன் சேர்த்து சி.பி.ஐயின் மேல்முறையீட்டு மனுவும் எதிர்வரும் 27 ஆம் திகதி விசாரணைக்கு எடுத் துக்கொள்ளப்படும் என்று தெரிவித்தது.

மேற்குவங்க தலைநகர் கொல்கத்தா வில் ஆர்.ஜி.கர் அரசு மருத்துவமனை யில் இரவு பணியில் இருந்த பெண் மருத்துவர் (வயது 31) கடந்த ஓகஸ்ட் 9 ஆம் திகதி சடலமாக மீட்கப்பட்டார். அவர் துஷ்பிரயோகம் செய்யப்பட்டு, கொடூரமாக கொலை செய்யப்பட்டமை பிரேத பரிசோதனையில் தெரியவந்தது. இந்த கொலை தொடர்பாக, பொலிஸில் தன்னார்வலராக பணியாற்றிய சஞ்சய் ராய் கடந்த ஓகஸ்ட் 10 ஆம் திகதி கைது செய்யப்பட்டார்.

இந்த வழக்கு மீதான விசாரணை கொல்கத்தாவில் உள்ள விசாரணை நீதிமன்றத்தில் நடைபெற்று வந்தது. வழக்கில் 81 சாட்சிகள் சேர்க்கப்பட்டனர். அவர்களில் 50 பேரிடம் நீதிமன்றத்தில் விசாரணை நடத்தப்பட்டது.

கடந்த 9 ஆம் திகதி அனைத்து தரப்பு விசாரணைகளும் நிறைவடைந்து திகதி குறிப்பிடப்படாமல் தீர்ப்பு ஒத்தி வைக்கப்பட்டது. இந்த வழக்கில் நீதிபதி அனிபர் தாஸ் கடந்த 18 ஆம் திகதி தீர்ப்பினை வழங்கினார். அப்போது, சிபிஐ முன்வைத்த ஆதாரங்களின் அடிப்படையில் சஞ்சய் ராய் குற்றவாளி என்று நீதிபதி தீர்ப்பளித்தார். தண்டனை விவரம் கடந்த 20 ஆம் திகதி அறிவிக் கப்பட்டது.

ஜனவரி 20 அன்று, குற்றவாளி சஞ்சய் ராய்க்கு ஆயுள் தண்டனை விதிக்கப்படுகிறது. இதன்மூலம் அவர் தனது வாழ்வின் கடைசி நாள் வரை சிறையில் இருப்பார். மேலும் அவருக்கு 50 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப் படுகிறது என்று நீதிபதிகள் தீர்பளித் திருந்தார்.



# மகா கும்பமேளாவில் நீராடிய பக்தர்கள் எண்ணிக்கை 10 கோடியைத் தாண்டியது

உத்தர பிரதேச மாநிலம் பிரயாக் ராஜில் நடைபெற்று வரும் மகா கும்ப மேளாவில் புனித நீராடிய பக்தர் களின் எண்ணிக்கை 10 கோடியை தாண்டியுள்ளது.

இதுகுறித்து உத்தர பிரதேச அரசு நேற்று குறிப்பிடுகையில்,

“உலகின் மிகப்பெரிய மத விழாவான மகா கும்பமேளா பிரயாக்ராஜில் ஜனவரி 13 ஆம் திகதி தொடங்கியது. எதிர்வரும் பெப்ரவரி 26 வரை நடைபெறவுள்ளது. இந்த நிகழ்வில் 45 கோடிக்கும் அதிக மானோர் பங்கேற்பார்கள் என்று ஏற்கெனவே மதிப்பிடப்பட்டுள் ளது.

இந்த நிலையில், கங்கை, யமுனை, புராணத்தில் கூறப்பட்ட சரஸ்வதி ஆகிய மூன்று நதிகள் சங்கமிக்கும் இடமாக கருதப்படும் திரிவேணி சங்கமத் தில் நீராடிய பக்தர்களின் எண் ணிக்கை 10 கோடி என்ற மைல்கல்லை தாண்டியுள்ளது.

கும்பமேளாவுக்கு வரும் பக்தர் களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் லட்சக்கணக்கில் அதிகரித்து வருகி றது. புனித நீராடுவதிலும், ஆன்மிக நிகழ்ச்சிகளில் பங்கேற்பதிலும் பக் தர்கள் அதிக ஆர்வம் காட்டி வருகின் றனர். எனவே, இந்த எண்ணிக்கை அடு-த்த சில நாட்களில் இரண்டு மடங்காக உயரக்கூடும் என எதிர்பார்க்கப் படுகிறது.” என்று குறிப்பிட்டுள்ளது.





# பயங்கரவாத அமைப்பாக மீண்டும் ஹவுதிகளை அறிவித்தார் ட்ரம்ப்!

ஹவுதிகள் அமைப்பை பயங்கரவாத அமைப்பாக அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் மீண்டும் அறிவித்துள்ளார்.

பயங்கரவாத அமைப்பின் பட்டியலிலிருந்து ஹவுதிகளை அமெரிக்க முன்னாள் ஜனாதிபதி ஜோ பைடனின் நிர்வாகம் அகற்றியது

இதனை மாற்றியமைக்கும் வகையில் ஹவுதிகள் அமைப்பை பயங்கரவாத அமைப்பாக டொனால்ட் ட்ரம்ப் அறிவித்துள்ளார்.

ஜோ பைடன் நிர்வாகத்தின் பலவீனமான கொள்கையின் விளைவாக, ஹவுதிகள் அமெரிக்க கடற்படை போர்க்கப்பல்கள் மீது பல முறை துப்பாக்கிச் சூடு நடத்தியுள்ளதாக வெள்ளை மாளிகை குறிப்பிட்டுள்ளது.

# குடியுரிமையில் மாற்றத்தினை ஏற்படுத்தும் ட்ரம்பின் உத்தரவு அரசமைப்புக்கு முரணானது

## அமெரிக்க நீதிமன்றம் அறிவிப்பு

பிறப்புரிமை குடியுரிமையை மாற்றுவதற்கான அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்பின் உத்தரவை செயற்படுத்துவதனை அந்த நாட்டு நீதிமன்றம் தற்காலிகமாக நிறுத்தியுள்ளது.

டொனால்ட் ட்ரம்ப் அமெரிக்க ஜனாதிபதியாக பதவியேற்ற நிலையில் பல்வேறு நிர்வாக உத்தரவுகளில் கையெழுத்திட்டார்.

இதற்கமைய, அமெரிக்காவில் பிறந்த குழந்தை ஒன்றின் தாய் அல்லது தந்தை அமெரிக்க பிரஜையாக அல்லது சட்டப்பூர்வமான நிரந்தர குடியிருப்பாளராக இல்லாத நிலையில் குறித்த குழந்தையின் குடியுரிமையை அங்கீகரிப்பதனை மறுக்கும் உத்தரவிலும் கையெழுத்திட்டார்.

எதிர்வரும் பெப்ரவரி மாதம் முதல் அமுலாகும் வகையில் இந்த உத்தரவை செயற்படுத்துவதற்கு அமெரிக்க நிறுவனங்களுக்கு ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் உத்தரவிட்டிருந்தார்.

இந்த நிலையிலேயே, குறித்த உத்தரவை செயற்படுத்துவதனை இடைநிறுத்திய அமெரிக்க நீதிமன்றம், இந்த உத்தரவு அரசமைப்புக்கு முரணானது என குறிப்பிட்டுள்ளது.

இருப்பினும், நீதிமன்ற தீர்ப்புக்கு எதிராக மேன்முறையீடு செய்யவுள்ளதாக அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் தெரிவித்துள்ளார் என சர்வதேச ஊடகங்கள் குறிப்பிட்டுள்ளன.

# முதல் முறையாக சிறந்த நடிகைக்கான பிரிவில் ஆஸ்கார் விருதுக்காக திருநங்கை பரிந்துரை

அமெரிக்காவின் லொஸ் ஏஞ்சலிஸில் பரவிவரும் காட்டுத்தீ காரணமாக திரைப்படங்களுக்கான வருடாந்த ஆஸ்கார் விருது விழாவிற்கான திகதி இரண்டு முறை ஒத்தி வைக்கப்பட்டது.

இதேவேளை மார்ச் 2 ஆம் திகதி லொஸ் ஏஞ்சலிஸில் 97 ஆவது ஆஸ்கார் விருது விழா நடைபெற உள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

சிறந்த திரைப்படம், சிறந்த நடிகர், சிறந்த நடிகை, சிறந்த தொழில்நுட்பக் கலைஞர்கள் என பல்வேறு பிரிவுகளில் கீழ் இந்த வருடத்தின் விருதுகளுக்கான இறுதித் தேர்வு பட்டியலை ஆஸ்கார் குழு நேற்று முன்தினம் வெளியிட்டுள்ளது.

அதிகபட்சமாக, பிரெஞ்சு திரைப்பட



இயக்குநர் ஜாக் ஆடியார்ட் இயக்கிய 'எமிலியா பெரெஸ்' திரைப்படமானது சிறந்த திரைப்படம், சிறந்த நடிகை, சிறந்த திரைக்கதை, சிறந்த பாடல் உள்ளிட்ட 13 பிரிவுகளின் கீழ் பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

இப்பட்டியலில் திருநங்கையான கர்லா சோஃபியா காஸ்கன் சிறந்த நடிகை பிரிவில் பரிந்துரை செய்யப்பட்டுள்ளார்.

திருநங்கை நடிகை ஒருவர் சிறந்த நடிகை பிரிவில் ஆஸ்கார் பரிந்துரையில் இடம்பெற்றது இதுவே முதல் முறையாகும்.

அத்தோடு ஆங்கிலம் அல்லாத பிற மொழிப் படம் ஒன்று அதிக பிரிவில் பரிந்துரைக்கப்படுவது இதுவே முதல் முறை.

எமிலியா பெரெஸ் படத்துக்கு அடுத்தபடியாக ஜான் எம். சூ இயக்கிய ஹாலிவுட் திரைப்படமான 'விக்டு' திரைப்படம் 10 பிரிவுகளில் விருதுக்கு பரிந்துரைக்கப்பட்டுள்ளது. மேலும் பிராடி கார்பெட் இயக்கிய 'தி ப்ரூட்டலிஸ்' திரைப்படமும் 10 பிரிவுகளில் பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

# இன்றைய ராசி பலன்கள் - 25.01.2025




இன்று அனைத்தும் சுமூகமாக நடக்கும். நம்பிக்கை உணர்வு உங்களை வெற்றி யின் உச்சத்துக்கு அழைத்துச் செல்லும்.

பணியிடத்தில் பிரகாசமான வளர்ச்சி காணப்படும். பணியிடத்தில் உங்களிடம் மறைந்திருக்கும் ஆற்றலை வெளிக்கொணர்வீர்கள்.

உங்கள் துணையிடம் அன்பையும் காதலையும் வெளிப்படுத்துவீர்கள். உங்களின் நண்பர் வீட்டு திருமண விழாவில் கலந்து கொண்டு இருவரும் இனிமையான தருணங்களைக் கழிப்பீர்கள்.

பணப்புழக்கம் அபரிமிதமாக காணப்படும். உங்கள் பணத் தேவைகளை உங்களால் பூர்த்தி செய்து கொள்ள முடியும். இது உங்களுக்கு திருப்தி அளிக்கும்.

உங்களிடம் காணப்படும் உறுதி மற்றும் ஆற்றல் காரணமாக உங்களின் ஆரோக்கியம் சிறப்பாக இருக் கும்.




எதிர்மறை விளைவுகளை தடுக்க இந்து எந்த செயலையும் தொடங்குவதற்கு முன் கவனமாக இருக்க வேண்டும். உங்கள் இலக்குகளை அடைவதில் தாமதங்கள் காணப்படும். நற்பலன்கள் காண்பதற்கு பொறுமை அவசியம்.

பணியிடத்தில் ஏதுவான சூழ்நிலை இருக்காது. இன்று பணிகள் அதிகமாக காணப்படும். உங்கள் பணிகளை திட்டமிட்டு ஒழுங்கமைப்பது அவசியம்.

கவனமற்ற வார்த்தைகளின் காரணமாக உறவின் நல்லிணக்கம் பாதிக்கப்படும். விஷயங்களை லேசாக எடுத்துக்கொண்டு உங்கள துணையுடன் மகிழ்ச்சியாக இருப்பது சிறந்தது.

நிதிநிலைமை திருப்திகரமாக இருக்காது. கூடுதல் செலவினங்கள் காணப்படும்.

இன்று ஆரோக்கியம் சிறப்பாக இருக்காது. கண் களில் எரிச்சல்கள் ஏற்படலாம்.




இன்று உங்கள் இலக்குகள் குறைந்து காணப்படும். உங்கள் இலக்கு களை அடைய நினைத்தாலும் அதனை செய்து முடிப்பதில் பல கடினங்களை எதிர்கொள்ள நேரும். சோதனையான இந்த தருணத்தில் பொறுமையுடன் இருக்க வேண்டியது அவசியம்.

பணியிடத்தில் சிறப்பான பலன்கள் கிட்டாது. பணிகள் முடிக்கப்படாமல் நிலுவையில் இருக்கும். இது உங்க ளுக்கு கவலையை ஏற்படுத்தும். பணியில் மந்த நிலை காணப்படும்.

நீங்கள் அமைதியிழந்து காணப்படுவீர்கள். அதனை உங்கள் துணையிடம் வெளிப்படுத்துவீர்கள். இதனால் கருத்து வேறுபாடு காணப்படும்.

நிதி வளர்ச்சிக்கு இது சாதகமான நாள் அல்ல. குழந்தைகள் நலனுக்காக செலவு செய்ய நேரும்.




இன்று முன்னேற்றகரமான பலன் கள் காணப்படும். சமநிலையான அணுகுமுறை காணப்படும். நீங்கள் சரியான முடிவுகளை எடுப்பீர்கள். அமைதி யையம் திருப்தியையும் உணர்வீர்கள்.

உங்கள் திறமைக்காக உங்கள் மேலதி காரிகளின் பாராட்டு பெறுவீர்கள். பணியின்போது உங்கள் தனித்துவமான திறமைகளை வெளிப்படுத்துவீர்கள்.

உங்கள் துணையுடன் சேர்ந்து இன்றைய நாளை கழிப்பீர்கள். இருவரும் சேர்ந்து நண்பர் வீட்டு விழாவுக்கு செல்வீர்கள். இதனால் இருவரும் ஒருவரையொருவர் நன்கு புரிந்து கொள்ள முடியம்.

பணப்புழக்கம் சிறப்பாக இருக்கும் இன்று பணம் சேமிக்கும் நிலையில் இருப்பீர்கள்.

இன்று பூரணமான ஆரோக்கியம் காணப்படும். உங்களிடம் சிறந்த ஆற்றல் காணப்படும்.




இன்று எதிர்பார்த்த பலன்கள் கிடைக்காது. எந்த முடிவையும் எடுப்ப தற்கு முன் யோசிக்க வேண்டும். அவ நம்பிக்கை மற்றும் பாதுக்கப்பின்மை உணர்வை தவிர்க்க வேண்டும். சம்ப வங்கள் மாறாக நடந்தாலும், நம பிக்கையோடு அதனை எதிர்கொள்ள வேண்டும்.

இன்று பணிச்சுமைகள் அதிகமாக காணப்படும். குறித்தநேரத்தில் உங்கள் பணிகளை முடிக்க நீங்கள் சிறப்பான முறையில் திட்டமிட வேண்டும்.

உங்கள் துணையுடன் நல்ல புரிந்துணர்வை உங்க ளால் பராமரிக்க இயலாது. உங்களின் எரிச்சலான உணர்வை உங்கள் துணையிடம் வெளிப்படுத்துவீர்கள். இது உறவின் நல்லிணக்கத்தை பாதிக்கும்.

பணவரவு குறைந்து காணப்படும். அதிக செலவுகள் இருக்கும் காரணத்தால் போதிய அளவு பணம் சேமிக்க இயலாது.




இன்று பதற்றமான சூழ்நிலை காணப்படும். ஆன்மீகத்தில் ஈடுபடுவதன் மூலம் இந்தச் சூழ்நிலையை நீங்கள் சமாளிக்கலாம். இன்று செயல்களில் மும்மரமாக ஈடுபட்டு சாவல்களை சமாளிக்க வேண்டும்.

பணிகள் நிலுவையில் இருக்கும். சமூகமான பலன் கள் கிடைக்க நீங்கள் சிறந்த யுத்திகளைக் கையாள வேண்டும். உங்கள் பணிகளை கவனமாகச் செய்ய வேண்டும்.

உங்கள் துணையிடம் அகந்தைப் போக்கை காட்டுவதை தவிர்க்க வேண்டும். உறவின் நல்லிணக்கத்தைப் பேண கவனமாக வாரத்தைகளை பயன்படுத்த வேண்டும்.

இன்று வரவும் செலவும் இணைந்து காணப்படும். பணத்தை கையாளும்போது கவனம் தேவை.

இன்று மிதமான ஆரோக்கியம் காணப்படும்.




இன்றைய நாள் அனுகூலமானதாக இருக்காது. அமைதியுடனும் மகிழ்ச்சி யுடனும்இருக்க வேண்டியது அவசி யம். இன்றைய ஏற்ற இறக்கமான சூழ் நிலைகளை சமாளித்து நடந்து கொள்ள வேண்டும்.

உங்கள் பணியில் தவறுகள் நேர வாய்ப்புள்ளது. இன்று கவனம் மிகவும் தேவை.

உங்கள் துணையுடன் மகிழ்ச்சியான தருணங்களை பகிர்ந்து கொள்வீர்கள். நல்ல புரிந்துணர்வை ஏற்படுத்த நீங்கள் முயல வேண்டும்.

நிதிநிலைமை இன்று அனுகூலமாக இருக்காது. கூடுதல் செலவினங்கள் காணப்படும். இதனால் அதி ருப்தி நிலவும்.

இன்று பதற்றத்துடன் காணப்படுவீர்கள். அது உங்கள் ஆரோக்கியத்தை பாதிக்கும்.




இன்று உறுதியான நாள். நம்பிக்கை யோடு எடுக்கும் முக்கியமான முடிவுகள் உங்கள் வளர்ச்சிக்கு உதவும். நீங்கள் இன்று உறுதியுடனும் உற்சாகத்துடனும் காணப்படுவீர்கள்.

உங்கள் பணியில் முன்னேற்றம் காண்பீர்கள். சக பணியாளர்களுடன் நல்லுறவு பராமரிப் பீர்கள். உங்கள் செயல்திறனுக்கு பாராட்டு பெறுவீர்கள்.

நீங்கள் உங்கள் துணையிடம் நம்பிக்கையாக நேர்மையாக நடந்துகொள்வீர்கள். இதனால் இருவருக்கும் இடையே நல்லுறவு பராமரிக்கப்படும்.

பணப்புழக்கம் தேவையைவிட அதிகமாக இருக்கும். பணத்தை சேமித்து பாதுகாப்பை அதிகரிப்பீர்கள்.

இன்று ஆரோக்கியம் சிறப்புடன் இருக்கும். நேர்மறை எண்ணங்களால் ஆரோக்கியமாக இருப்பீர்கள்.

# இன்றைய ராசி பலன்கள் - 25.01.2025




இன்று நம்பிக்கையான நாள். உங்கள் இலக்குகளை அடைய இன்று நீங்கள் எடுக்கும் முயற்சிகளுக்கு நல்ல பலன்கள் கிடைக்கும். இன்று நீங்கள் எடுக்கும் முடிவுகளின் பலன்கள் உங்களுக்கு சாதகமாக இருக்கும்.

உங்கள் பணியைப் பொருத்தவரை இன்று பாது காப்பான நிலையில் இருப்பீர்கள். உங்களின் சிறந்த செயல்திறனுக்கு நற்பெயர் கிடைக்கும்.

குடும்பத்தில் நடக்கும் சுப நிகழ்சிகள் உங்களை உற்சாகப்படுத்தும். உங்கள் துணையிடம் நல்லுறவை ஏற்படுத்துவீர்கள்.

நிதிநிலை வளர்ச்சி மகிழ்ச்சியை அளிக்கும். நிதி நிலையில் அதிர்ஷ்டத்தை அனுபவிக்க ஏதுவான சூழ்நிலை காணப்படும்.




உங்கள் செயல்களில் கவனம் தேவை. எதிர்மறை உணர்வுகளைத் தவிர்க்க வேண்டும். எப்பொழுதும் மகிழ்ச்சியாக இருங்கள்.

பணியிடச் சூழல் அமைதியை அளிக் காது. சக பணியாளர்கள் மற்றும் மேலதி காரிகளின் இடையூறுகள் காணப்படும். உங்கள் பணிக்கு அங்கீகாரம் கிடைக்காது.

உங்கள் துணையிடம் பொறுமை இழந்து காணப்படுவீர் கள். கவனமற்ற வார்த்தைகளை உங்கள் துணையிடம் உதிர்ப்பீர்கள். உறவின் நல்லிணக்கத்தை பாதிக்கும் அத்தகைய வார்த்தைகளை தவிர்ப்பது நல்லது.

நிதிநிலைமை அனுகூலமாக இருக்காது. இன்று தேவையற்ற வீணான செலவுகள் காணப்படும்.

சளி மற்றும் தோல் எரிச்சல்கள் ஏற்படலாம். எண்ணெய்ப் பதார்த்தங்கள் உட்கொள்வதைத் தவிர்க்க வேண்டும்.




இன்று உங்கள் வளர்ச்சியில் கவனம் செலுத்த வேண்டும். உங்கள் வளர்ச்சி யில் சில இடையூறுகளை நீங்கள் சந் திக்க நேரும். விவேகமாக சிந்தித்து செயல்படுவது நல்லது.

உங்கள் பணிகளை கவனமாக ஆற்ற வேண்டும். அதிக பணிகள் காரணமாக தவறுகள் ஏற்பட வாய்ப்புள்ளது.

உங்கள் துணையிடம் பேசும் போது கவனம் தேவை. மகிழ்ச்சியை தக்க வைக்க இது மிகவும் அவசியம்.

இன்று கூடுதல் செலவினங்கள் காணப்படும். இன்று பண வரவுக்கான அதிர்ஷ்டம் குறைவு. போதிய அளவு பணம் கையில் இருக்காது.

முதுகு வலி ஏற்பட வாய்ப்பு உள்ளது. இன்று தியானம் மற்றும் யோகா மேற்கொள்வது உடல் நலத் துக்கு நல்லது.




இன்று அனுகூலமான பலன்கள் கிடைக்கும். உங்கள் இலக்குகளை வெற்றிகரமாக செய்து முடிப்பீர்கள். நல்ல வளர்ச்சி காணப்படும். உங்கள் விருப்பங்கள் நிறைவேறும் நாள்.

உங்கள் பணிகளை இடையூறின்றி ஆற்றுவீர்கள். பல புதிய வாய்ப்புகள் கிடைக்கும். அது உங்களுக்கு மகிழ்ச்சியை அளிக்கும்.

உங்கள் துணையிடம் நல்லுறவு கொண்டிருப்பீர்கள். இனிமையான வார்த்தைகளைப் பேசுவீர்கள். வெளி யிடங்களுக்கு சென்று வர திட்டமிடுவீர்கள்.

உங்களிடம் உள்ள பணம் உங்களுக்கு போது மானதாக இருக்கும். நிதிநிலைமை சிறப்பாக இருக்கும்.

உங்கள் உடல் நலத்தை சிறந்த முறையில் பரா மரிப்பதால் இன்று சிறந்த ஆரோக்கியத்துடன் கானப் படுவீர்கள்.

# கைதிக்குப் போதைப் பொருள் வழங்கிய இளம் மனைவி கைது



**(கி.வசந்தன்)**

வவுனியா சிறைச்சாலைக்குள் உள்ள கைதி ஒருவருக்கு ஹெரோயின் வழங்க முற்பட்ட 28 வயது குடும்ப பெண் ஒருவரை நேற்றுத் தாங்கள் கைது செய்துள்ளனர் என வவுனியா பொலிஸார் தெரிவித்தனர்.

அநுராதபுரம் பகுதியைச் சேர்ந்த இளம் குடும்பஸ்தர் ஒருவர் குற்றச் செயல் தொடர்பில் கைது செய்யப்பட்டு வவுனியா சிறைச்சாலையில் மூன்று மாதங்களாக தடுத்து வைக்கப்பட் டுள்ளார். அந்தக் குடும்பஸ்தரின் வழக்கு நேற்று வவுனியா நீதிமன் றில் எடுத்துக் கொள்ளப்பட்ட போது வழக்கு விசாரணைக்காக வருகை தந்த அவரது மனைவி நீதிமன்றத் தில் இருந்து அந்தக் குடும்பஸ்தரை சிறைச்சாலை கொண்டு சென்ற போது அவருடன் உரையாடி பொதி ஒன்றை வழங்கியுள்ளார்.

இதில் சந்தேகமடைந்த சிறைக் காவலர்கள் உடனடியாக வவுனியா பொலிஸாருக்கு தெரியப்படுத்தினர். அதையடுத்து, அப் பொதியில் இருந்து 2 கிராம் ஹெரோயின் போதைப் பொருள் கண்டு பிடிக்கப்பட்டது. பொலிஸாரால் போதைப் பொருள் மீட்கப்பட்டதுடன், அந்தப் பெண்ணும் கைது செய்யப்பட் டார். மேலதிக விசாரணைகளின் பின் நீதிமன்றில் அவரை முற்படுத்த பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ள னர்.